# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜனவரி 2002 ஜீவியம் 7 மலர் 9

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 13 |
| லைப் டிவைன் | 14 |
| சிறு குறிப்புகள் | 20 |
| பகவானுடைய இதர நூல்கள் | 24 |
| அன்பர் கடிதம் | 26 |
| அஜெண்டா | 29 |
| ஞாபகம் | 31 |
| லைப் டிவைன் - கருத்து | 41 |
| எது நியாயம் | 43 |
| சாவித்ரி | 47 |
| வாழ்வின் மறுமொழி | 49 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 51 |


❊ ❊ ❊

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**676) தலைவன், தொண்டன் இருவர் செய்யும் வேலையின் கரு ஒன்றே என்பதை அவர்களுடனிருப்பவர்கள் அறிவார்கள். ஆனால் தொண்டன் தலைவனானால் அதற்குரிய வலிமையில்லாத காலத்து அவன் தோல்வியடைவான்.**

***தொண்டனே தலைவன், தலைவனே தொண்டன்.***

தொண்டன் தலைவனாவது மூன்று வகையின. *1)* நெடுநாள் தொண்டனாக இருந்து, செய்யும் வேலையின் நுணுக்கத்தை அறிந்து அறிவும் அனுபவமும் முதிர்ச்சியடைந்து, உடனிருப்பவர்கள் இவனுடைய தகுதியை அறிந்து பாராட்டி, சந்தர்ப்பம் வரும்பொழுது தலைவனாவது. *2)* ஒரு தலைமுறையில் பெற்ற அனுபவம் அடுத்த தலைமுறையில் முதிர்ந்து பலிப்பது. *3)* ஒரு பிறவியில் பெற்ற அனுபவம் அப்பொழுது முதிர்ந்து பலன் தராமல் அடுத்த பிறவியில் பலன் தருவது.

தொண்டன் செய்யும் வேலைகளும், தலைவன் செய்யும் வேலைகளும் முக்கியமான விஷயத்தில் ஒன்றாக இருப்பதுபோல் தோன்றும், சில சமயங்களில் ஒன்றாக இருக்கும். நூலாசிரியர் எழுதியதும், டைப்பிஸ்ட் டைப் செய்ததும் ஒன்றேயானாலும் செயல்களின் கரு வேறு. வீட்டில் திருமண வேலைகளைத் தகப்பனார் செய்வதும், மகன் செய்வதும் ஒன்றேயாகத் தெரியும். இங்கு ஒற்றுமை அதிகம். பொறுப்பைத் தகப்பனார் வகிப்பதுபோல் மகனும் வகிக்கலாம். இங்கு வித்தியாசம் குறைவு. லால்பகதூர் சாஸ்திரி மந்திரிசபையில் 4ஆம் இடம் வகித்தபொழுது நேருவின் வேலைகள் அனைத்தையும் செய்தார். அதனால் அவருக்குப் பிரதம மந்திரி பதவி வந்தது. 1½ வருஷம் அந்த பாரம் தாங்க முடியவில்லை. அதனால் இறந்தார் என அன்னை கூறுகிறார். வேலை ஒன்றே. பாரத்தை நேரு தாங்கலாம், நேருவின் மகள் இந்திரா அனுபவமின்றியும் தாங்கலாம், நெடு நாள் அனுபவமான மொரார்ஜியும் தாங்கலாம், அனுபவமிருந்தும் பாரத்தைத் தாங்கும் சக்தியில்லாத சாஸ்திரியால் தாங்க முடியாது.



தொண்டர்கள் பல விதத்தினர். தலைவருடனே இருந்து வேலை செய்யும் தொண்டர்கள் ஒரு வகையினர். தலைவரையே பார்த்து அறியாமல், கொடி மட்டும் பிடிக்கும் தொண்டர்கள் மறு வகையினர். கட்சியில் தீவிரமாக இணைந்து தலைவருடன் வேலை செய்யும் தொண்டரையே நான் குறிப்பிடுகிறேன். அனுபவமிருந்து, வலிமை இல்லாத தொண்டர்களுக்கு வாழ்வு பதவியை அளிப்பதில்லை. அளித்தால் அவன் அதை இழப்பான். அவனுக்கு வலிமை வரும்வரை வாழ்வு காத்திருக்கும்.

அன்னை செயல்படுவது வேறு வகை. அனுபவமுள்ள தொண்டன், வலிமையில்லாத நேரத்தில் அன்னையை ஏற்றுக் கொண்டால் அவனுக்கு வலிமை வரும். வலிமையிருந்து அனுபவம் இல்லாவிட்டால் அனுபவம் வரும். எது இல்லாவிட்டாலும், ஒன்றிருந்து ஆரம்பித்தால் மற்றது அன்னை மூலம் வரும். எதுவும் இல்லா விட்டாலும், பக்தியும் நம்பிக்கையும் உயர்வாக இருந்தால், எல்லாம் வரும்.

சுதந்திரம் வருமுன் இந்தியர்கட்கு உரிமை கிடையாது. வந்த பின் எந்த இந்தியனும் எதைப் பெற விழைந்தாலும் - படிப்பு, செல்வம், பதவி, உயர்வு ஆகிய எதுவானாலும் - அவனுக்கு உரிமையுண்டு. இல்லாத உரிமையை, சுதந்திரம் பெற்றுத் தந்தது. மனிதனுக்கு இல்லாத உரிமையை மரணத்தை அழிக்கும் உரிமையை அன்னை பெற்றுத் தந்திருக்கிறார். அது யோகத்தை நாடுபவர்க்குரியது.

அன்றாட வாழ்வில் சாதாரண மனிதனுக்கு இல்லை என்பவை பல. அவற்றுள் இதுவும் ஒன்று. வலிமையில்லாத தொண்டனுக்கு உள்ள அனுபவம் அவனுக்குத் தலைமையைப் பெற்றுத் தாராது. அன்னை வாழ்வு அதைப் பெறும் உரிமை, திறமை, வாய்ப்பு, தகுதியைப் பெற்றுத் தரும்.

**இன்று வரை மனிதனுக்கு வாழ்வில் இல்லை என்ற எதையும் மனிதன் பெற விழைந்தால், அன்னை அவனுக்கு அதை அவன் தூய்மையான பக்திக்கும், ஆழ்ந்த நம்பிக்கைக்கும் பரிசாக அளிக்கின்றார்.**

இல்லாத உரிமையை உற்பத்தி செய்து அளிப்பது அன்னை எனும் அவதாரம்.

❊ ❊ ❊

**677) வலிமை பிறப்போடு வருவது. அல்லது அனுபவத்தால் வருவது. அவ்வலிமையை வேறு வகையாகவும் பெறலாம். அடிப்படையில் வலிமையும், எளிமையும் ஒன்றே என்றறிந்தால், இரண்டும் பிரம்மம் என அறிந்தால், வலிமை வரும்.**

***வலிமையான பிரம்மம் எளிமையாகவுமிருக்கும்.***

ஒரு பிறப்பில் பெறும் அனுபவம், அடுத்த பிறப்பில் பலன் தரும். அனுபவத்தில் அதன் சாரம்(essence) சூட்சுமமாகக் கலந்துள்ளது. அனுபவம் இப்பிறப்போடு முடிந்துவிடுகிறது. அடுத்த பிறப்பில் தொடர்வதில்லை. அனுபவத்தின் நினைவுகள் அடுத்த பிறப்பில் வருவதில்லை. அனுபவத்தின் சாரம் மட்டும் அடுத்த பிறப்பில் வரும். ஒரு வீரன் போர்க்களத்தில் பெறும் அனுபவங்கள், விவரங்கள், எதிரியை மடக்கும் யுக்திகள், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் தந்திரங்கள் அனைத்தும் சேர்ந்து, அவனுக்குச் சாமர்த்தியம் நிறைந்த தைரியத்தைக் கொடுக்கின்றன. சென்ற பிறவியில் போரிட்ட இடங்கள், தலைமை வகித்த படைகள், முறியடித்த எதிரிகள் இந்தப் பிறவியில் நினைவு வருவதில்லை. அதன் சாரமான தைரியமும், யுக்திகளும் இப்பிறவியில் வருகின்றன. பூர்வஜென்ம ஞானம் என நாம் கேள்விப்படுகிறோம். அது சென்ற பிறவியின் நிகழ்ச்சிகளை விவரமாக நினைவு வைத்திருப்பதாகும். பூர்வஜென்ம அனுபவச் சாரத்தை சைத்தியப் புருஷன் தாங்கி வருகிறான். நினைவை vital



being ஆவி பெறுகிறது. ஆனால் சென்ற பிறவியின் உடல் அழிந்தவுடன் அழிந்துவிடுகிறது. தவறி ஒரு துளி ஆவி இப்பிறவியிலும் ஒட்டிக் கொண்டிருந்தால், நிகழ்ச்சிகள் நினைவிருக்கும். அப்படிப்பட்ட பூர்வ ஜென்ம நினைவுக்கு ஆன்மிகப் பலனில்லை.

பூர்வஜென்ம ஞானத்தை ஆன்மாவிற்குடையதாக்குவது சைத்தியப் புருஷன். அவன் வெளி வந்தால் இதே ஞானம் பூரணமாகக் கிடைக்கும். அதற்கு ஆன்மீக அர்த்தமுண்டு. செல்வத்தை ஆர்வமாக நாடும் ஒருவன் பெருஞ்செல்வம் பெறும் நேரம், இதனால் என்ன பலன் என்ற எண்ணம் எழுந்தபடியிருக்கும். ஓரளவுக்கு மேல் தேவையைப் பூர்த்தி செய்ய செல்வம் தேவை. அந்நிலையைக் கடந்தபின், செல்வம், செல்வாக்கை அளிக்கிறது. செல்வாக்கை செல்வம் முனைந்து பெற்றபின், பிறர் அதே செல்வாக்கை பதவியின் மூலம் பெறுவதைக் கண்டு ஆச்சரியப்படுகின்றனர். செல்வத்தை நாடாத இலட்சிய வாழ்க்கை நடத்துபவர்கள் அரிபொருள். அவர்களில் சிலருக்கும் செல்வத்தால் ஏற்படும் செல்வாக்கு வருவதைக் காணலாம். ஒன்றை – வலிமை, செல்வம் – பெற பல வழிகளுண்டு. நாம் எந்த முறையை வெற்றிகரமாகப் பின்பற்றினோமோ, அதற்கு எதிரான முறையிலும் அதைப் பெறுபவருண்டு. மேலும், நாம் பெற்றதும், அதற்கு எதிரானதும் ஒன்றே எனவும் அறியும் நேரம் உண்டு. சர்வம் பிரம்மம் என்ற வேத ஞானத்தை வாழ்வில் பெறுவதாகும் இஞ்ஞானம்.

இந்த ஞானம் – வலிமையும், எளிமையும் ஒன்றே – பெற்றால் எளியவனுக்கு வலிமை வரும். செல்வம் பெறுவதும், பெறாததும் ஒன்றே என்ற ஞானம் வரும்பொழுது செல்வமில்லாதவனுக்குச் செல்வம் பெறும் தகுதி ஏற்படும். பெறுவதும், பெறாததும் அவன் விருப்பம். இவை ஆன்மீக ஞானம்.

அன்னையை ஏற்றுக் கொண்டவர்க்கு ஆன்மீக ஞானம் வரும். ஆன்மீக ஞானமுள்ளவர்க்கு அன்னை மீது நம்பிக்கை ஏற்பட்டால்,

அன்னை அதிகமாகப் பலிப்பார். பகவானுடைய அடிப்படைத் தத்துவம் அறியாமையும், அறிவும் ஒன்றே என்பது. அறிவே தன்னை அறியாமையாக மாற்றிக் கொண்டது என்பது ஸ்ரீ அரவிந்தம்.

பிறப்பால் வலிமையைப் பெற்றாலும், அனுபவத்தால் வலிமையைப் பெற்றாலும், ஆன்மிக ஞானத்தால் வலிமையை அடைந்தாலும், அன்னை மீதுள்ள நம்பிக்கையால் வலிமை உள்ளிருந்து எழுந்தாலும், சர்வம் பிரம்மம் என்ற ஞானம் எதிரெதிரானவற்றில் ஒருமையைக் காட்டினாலும்,

**எளியவன் வலியவனின் வலிமையைப் பெறலாம்.**

எளியவன், வலிமையைப் பெற முடியும் எனில், வறுமையில் வாடுபவன் செல்வம் பெறும் வழியும் அதுவே. சோகத்தில் திளைத்து தன்னை இழந்தவன் பொங்கி எழும் சந்தோஷத்தைப் பொக்கிஷமாகப் பெற முடியும் என்று உணர்த்தும் முறையிது. அறியாமையால் மடையன் எனப் பிறந்தவன், மேதையாகும் யோகம் பூரணயோகம். இதன் கருவான ஆன்மீக ஞானம் உபநிஷத்தின் “சர்வம் பிரம்மம்” என்பதாகும்.

❊ ❊ ❊

**678) செயல் பூரணச் செயலானால், அது பூர்த்தியாகும். தன் அதிகபட்சத் திறமையைவிட உயர்ந்த இடத்தில் ஒரு காரியத்தைப் பூரணச் செயலாக ஆரம்பிக்க முடியுமானால், அதிக வெற்றி பெறலாம். ஆரம்பிக்கும் குணத்தை நாம் விட்டுவிட்டால், இறைவன் அங்குத் தன்னை அதிகமாகப் பூர்த்தி செய்துகொள்வான்.**

***நம்மை மறந்தபின் இறைவன் நம்மில் சாதிப்பதே பெரிய சாதனை.***

செய்யும் காரியம் கூடி வரவேண்டும் என அனைவரும் விரும்புகிறோம். பொதுவாகத் திறமை குறைவானால், தேவையானவை ஒன்றில்லையானால், நேரம் வரவில்லை எனில்,



தடையாக ஒன்றிருந்தால் காரியம் பூர்த்தி பெறாது. அன்றாடக் காரியங்கள், வழக்கமான காரியங்கள், பழக்கமான செயல்கள் தடையாக இருப்பதில்லை. ஏனெனில் நம் சமூகமும், நாம் வாழும் சூழ்நிலையும், காரியங்கள் பூர்த்தியாகும் சூழலை அனைவருக்கும் ஏற்படுத்தி இருப்பதால், அச்சூழலுள் நாம் செயல்படும்பொழுது, தடையின்றி காரியம் பூர்த்தியாகிறது. சமூகத்தில் சராசரிக்கும் குறைந்த மனிதனால் இந்தச் சாதகமான சூழ்நிலையிலும் வெற்றியாகச் செயல்பட முடிவதில்லை. அப்படி வெற்றி பெற தனக்குச் சராசரிக்குக் குறையும் திறமைகளை அவன் பெற்றுக் கொள்ள வேண்டும். Complete act பூரணச் செயல் என்பது, சூழலாலும், தன் நிறைவாலும், பூர்த்தியான செயலாகும். அன்றாடம் நாம் காணும் பூர்த்தியாகும் செயல்கள் அனைத்தும் பூரணச் செயல்களாகும்.

மனிதன் சராசரியாகச் செயல்பட்டு வெற்றியடைகிறான். அதிகபட்ச முயற்சி செய்து அதிக வெற்றி பெறுகிறான். அதற்கு மேற்பட்ட பலன் வாழ்விலில்லை. அன்னையிடம் உண்டு. அதற்கு மேற்பட்ட பலனை வாழ்வில் நாடினால், அகலக் கால் வைத்ததாகும். தன்னால் முடியாததைப் பேராசையால் அணுகி இருப்பதையும் அழித்துக் கொண்டதாகும். பேராசையில்லாமல், முழு முயற்சியுடன் தன் அதிகபட்சத் திறமையை மீறியதைச் செய்ய ஒருவர் முனைந்தால், அவர் எந்த வேலைக்குப் போகிறாரோ அங்குக் கீழ்க்கண்டதுபோல் நடக்கும்.

— புதிய சட்டம் தடையாக எழும்.

— அந்த வேலைக்குள்ள மனையைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளும்.

— அது போன்ற வேலைக்குத் தண்ணீர் அதிகமாகத் தேவைப்பட்டால் நாம் ஆரம்பித்த இடத்தில் நீர் வற்றிப் போகும்.

— வெளிநாட்டு மெஷின் அற்புதமாக வேலை செய்தது திடீரென நின்று வெளிநாட்டு இன்ஜீனியர் தேவை என்ற நிலை ஏற்படும்.

— இன்ஜீனியர் வந்தால் உடைந்த பார்ட், இனி உற்பத்தியில்லை என்பதால் எதுவும் செய்ய முடியாது என்பார்.

— பார்ட்னர்களுடன் உரிமைப் பிரச்சினை எழுந்து வேலை நின்றுவிடும்.

— அங்கே போனால் வீட்டில் ஆபத்தான காரியம் நிகழும்.

இதுபோன்ற நிலையில் ஜாதகம் பார்த்தால், இந்த வேலை கூடி வராது என்பார். சாஸ்திரம், சகுனம், குறி, வாய்ச்சொல், நாடி ஜோஸ்யம் எதைப் பார்த்தாலும் இது உன்னால் முடியாது என்று அவரவர் அவர்கள் பாணியில் விளக்கம் சொல்வார்கள். அன்னை பக்தர்களுக்கு வழியுண்டு. வழியுண்டு என்பதால் வேலையில் குறையுடன் ஆரம்பித்தால் வழி விடாது. மேற்சொன்ன தடைகள் இருந்தால், ஒன்றானாலும், பல ஆனாலும் அவை தாமே விலகும். பக்தர் ஆரம்பிப்பது complete act பூரணச் செயலாக இருக்க வேண்டும். செயலுக்குத் தேவையானவை, அறிவால் செய்யக் கூடியவை, முன் யோசனையால் செய்யக்கூடியவை, அனுபவத்தால் அறியக் கூடியவை, உணர்வு நிலை, ஆகியவை குறைவற இருந்தால், சட்டம் தடையாக எழுவதற்குப் பதிலாக, சாதகமானச் சட்டம் புதியதாக வரும். சர்க்கார் அது போன்ற தொழிலுக்கு மனை போன்ற வசதிகளை அளிக்க முன் வரும். தண்ணீர் வசதி ஏதோ காரணத்தால் பெருகும். வெளிநாட்டு இன்ஜீனியர் உள்ளூரில் இருப்பதாகச் சேதி வரும். தேவைப்பட்ட *(part)* பார்ட் தற்செயலாகக் கிடைக்கும். பார்ட்னர்கள், உடன் பிறந்தவர் போலாவார்கள். வேலைக்குப் போனால், வீட்டில் நல்லது நடக்கும். இதையும் தாண்டிய பலன் ஒன்றுண்டு.



நாமே முயன்று பெரிய காரியத்தை அன்னையை நம்பி ஆரம்பித்தால் தடையின்றி பலிக்கும் என்றேன். அந்தத் திறமையும், பக்குவமும் வந்தபின், **ஆரம்பிக்காமல்** அன்னையை மட்டும் நம்பியிருந்தால், தானே அக்காரியம் பூர்த்தியாவதை நம் ஊனக் கண்ணால் பார்க்கலாம்.

❊ ❊ ❊

**679) விழிப்பு ஏற்பட்டபோதெல்லாம், நிரந்தர அருள் தடையின்றிச் செயல்படுகிறது. அருள் நம்மை நாடி வருவது திருவுருமாற்றத்திற்கு வழி செய்யும். ஆர்வம் திருவுருமாற்றத்தைப் பூர்த்தி செய்யும்.**

***நிரந்தர விழிப்பின் ஆர்வம் அருளின் நிரந்தரத் திருவுருமாற்றம்.***

நம் அன்றாட வாழ்வில் தெய்வம் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஏதோ ஓர் ஆபத்திலிருந்து தப்பினால், தெய்வச் செயல் என நாம் அறிகிறோம். வாழ்வில் ஒரு முறை நடக்காதது ஒன்று நடந்து விடுகிறது. அதை ஆச்சரியமாக நினைக்கிறோம். தெய்வம் என்பது பொய்யன்று என அந்த நேரம் நினைக்கிறோம். பேராபத்து விலகினாலும், நடக்க முடியாதது நல்லதாக நடந்தாலும் நம் “கண்ணுக்கு” தெய்வம் புலப்படுகிறது. அத்துடன் அதை நாம் மறந்து விடுகிறோம்.

அருள் என்றும் நின்று நிலைத்துள்ளது. மழையாகப் பொழிந்தபடி இருக்கின்றது. காற்று எப்படி நம்மை எந்நேரமும் சூழ்ந்துள்ளதோ அதுபோல் அருள் நம்மைச் சூழ்ந்துள்ளது. ஒரு நிமிஷம் மூச்சுவிடாமல் நம்மாலிருக்க முடியாது என்பதை நாம் அறிவோம், ஆனால் பொருட்படுத்துவதில்லை. அதேபோல் ஒரு நிமிஷம் அருளில்லை எனில் உலகம் இருக்காது என்பதை மகான்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் பொருட்படுத்துவதில்லை. தியானம் அமைந்தால் அருள் பிரவாகமாகத் தலைவழியே உடலுள் நுழைவதைக் காணலாம். தியானம் கலைந்த சிறிது நேரத்தில் பாயும்

சக்தி குறைந்து மறைவதும் தெரியும். ஆபத்தில் 'தெய்வமே காப்பாற்று' என்று அலறும்பொழுது பட்டுப்போன மரப்பட்டைபோல் உலர்ந்து காய்ந்த உடலின் உள்ளேயிருந்து விழிப்பெழுகிறது. விழிப்பு இருப்பதால், தியானத்தில் வரும் அருள் மழை, அந்த நேரம் வருகிறது. ஆபத்து விலகுகிறது. வீட்டில் ஒரு முக்கியமான காரியம் செய்ய பல நாள் முயன்றால், முயற்சி முதிரும்பொழுது ஜீவன் விழிப்புற்று, சூழ்நிலை மாறி, பல நல்ல காரியங்கள் ஒரே சமயத்திலும், தொடர்ந்தும் நடந்து, நாம் மேற்கொண்ட முயற்சியைப் பூர்த்தி செய்து தருகிறது.

நாம் செய்யும் காரியங்களே நமக்கு முக்கியமாக இருப்பதால், அவற்றில் மட்டுமே நம்மால் எதையும் விளங்கிக் கொள்ளமுடிகிறது. அதைவிட முக்கியமாக நாம் எதையும் கருதுவதில்லை. மாநில விளையாட்டுப் போட்டியில் ஜெயிப்பது, பேச்சுப் போட்டியில் வெல்வது, மகன் வெளிநாட்டிற்குப் போவது, மகளுக்கு உயர்ந்த மாப்பிள்ளை வருவதை விட உலகில் ஒரு பெரியதுண்டு என நாம் நினைப்பதில்லை. நம் மனதிலுள்ள குழப்பம் தெளிவதை இதைவிட உயர்வாக நாம் கருதுவதில்லை. மனம் குழம்பிய நிலையிலுள்ளவர், குழப்பத்தை விட்டு வெளிவருவது திருவுருமாற்றமாகும். மனம் இதுபோல் திருவுரு மாற்றமடைந்தால் அவர் நிலை பல மடங்கு உயரும் என்பதை அவர் அறியார். அது நடந்த பின்னும் அவரால் அறிய முடியாது. உடல் கடைசி நிலை. உணர்வு மனத்திற்கு அடுத்தது. சோகமே உருவானவரை உற்றாரும், நண்பர்களும் ஒதுக்கிவிடுவார்கள். சோகம் சந்தோஷமாக மாறுவது உணர்வின் திருவுருமாற்றம். இது யோக முயற்சியில் பெரியது. இது நடந்தாலும் எவரும் இதைப் பொருட்படுத்த மாட்டார்கள். இது நடந்தால் இவர் வாழ்வு மாறும். அதை அனைவரும் தவறாமல் கவனிப்பார்கள். "நம்ம ஊரில் அட்டெண்டராக இருந்தான், கிளப்பில் பெரிய அதிகாரிகட்கு ஆளாக வேலை செய்வான், என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. எங்கோ போய் பெரிய இடத்தில் புகுந்துவிட்டான். காரில் போகிறான். கவர்னர், மந்திரி இவன் இடத்திற்கு வந்தால் இவனே அவர்களை வரவேற்கிறான். அதிர்ஷ்டம்" என்பார்கள். உணர்வு திருவுருமாற்றமடைந்தால் பலனிது போலிருக்கும். உடல் திருவுருமாற்றம் கடைசி நிலை.



**அருள் பொழிந்தபடியிருக்கிறது. விழிப்பாக இருந்தால் பெற்று திருவுருமாற்றமடையலாம்.**

❋ ❋ ❋

**680) இறைவன் நம்மை நாடி வரும் பொழுது** descent **ஆர்வம் இருப்பதில்லை. ஆர்வம் எழும்பொழுது மனிதன் எப்படியிருக்கிறான் என்பதை பகவான் விவரித்து இருக்கின்றார். எல்லாப் பழக்கங்களிலிருந்தும் விலகினால் ஆர்வம் எழும்.**

***பழக்கம் விலகினால் ஆர்வம் எழும்.***

இடையறாது இறைவன் அருளாக நம்மை நாடி வருவதை நாம் அறிவதில்லை. அவன் வரும் வேளையில் நமக்கு அவன் மீது ஆர்வமிருப்பதில்லை. மரத்தில் அடிமரம் காய்ந்து பட்டை உலர்ந்து போயிருக்கும். அதனினின்று துளிர்த்தது இப்பொழுது கிளையாக இருக்கும். கிளை சிறு கிளைகளாகவும், குச்சிகளாகவும் மாறி, முடிவில் இலையாகி ஒரே ஓர் இடத்தில் துளிர்க்கும். ஒவ்வொரு கிளை முனையிலும் சில துளிர்கள் எழும். அதுவே பூத்துக் காய்க்கும். மற்ற இடங்கள் காய்ந்து சருகாக இருக்கும். பூத்துக் காய்க்குமிடம் மட்டும் ஜீவனோடிருக்கும். ஆர்வத்தைப் பொறுத்தவரை நம் வாழ்வு மரத்தைப் போலிருக்கும். நமது அத்தியாவசியமான தேவைகளைத் தேடுவதில் மட்டும் ஆர்வமிருக்கும். வாழ்வின் மற்ற இடங்கள் காய்ந்து பட்டை உரிந்து போய் அடிமரமாக இருக்கும்.

பெரும்பாலான மனிதனுடைய தேவைகள் பசி, தாகம், உறக்கத்தைப் பூர்த்தி செய்யும் உடலுக்குரியவை. உணர்ச்சிக்குரிய ஆசையின் தேவைகள் அடுத்தாற்போல். மனத்தின் எண்ண வளர்ச்சிக்குரிய தேவைகள் சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் போன்றவர்க்கே அமையும். ஆன்மாவின் தேவை இறைவன். அதை நாடுவதையே இங்கு ஆர்வம், இறை ஆர்வம் (aspiration) என்கிறோம். இது பக்திமான்கட்கு மட்டும் இருப்பது. ஆன்மா

விழித்தெழுந்து ஆர்வமாக வெளிவந்தால் இருண்ட குகையில் ஒளி நுழைந்தாற்போல், ஜீவனற்ற மனத்தின் ஆழத்தில் உயிருள்ள நிகழ்கால எண்ணங்களைத் தந்தியாக மீட்டும். மண்ணான உடல், ஆர்வம் எனும் அமிர்தத்தால் நனைந்து பொன்னான ஒளியை எழுப்பிப் பரப்பும். அகந்தை கரைந்து அகண்ட வெளியாகும். சுயநலம் சுறு சுறுப்பான பரநலமாகும். "ஆர்வம் எழுகிறது அம்மா! என்னை ஆட் கொள்ள வேண்டும்" என பகவான் ஆர்வம் எழுவதை வர்ணிக்கின்றார்.

இறைவன் நம்மை நாடி வருவதை descent கீழிறங்கி வருவதாகச் சொல்கிறார். அவர் வரும் தருணம் அற்புதமான ஆனந்தம் எழும் தருணம் என்பதால், ஆர்வம் எழுந்து அவரை வரவேற்றால், யுகங்கள் நாட்களாகச் சுருங்கும் என்பதை இறைவன் வரும் தருணம் Hour of God என்ற கட்டுரையில் எழுதுகிறார்.

மனிதன் சுயநலத்தால் சூழப்பட்டுள்ளான். பழக்கத்தால் செயல்படுகிறான். சமூகத்தால் வெளிவாழ்வில் இயக்கப்படுகிறான். மனச்சாட்சியால் உள்ளொளியை நிர்ணயிக்கின்றான். அபிப்பிராயத்தை ஏற்படுத்தி அதையே அறிவெனக் கொண்டு அதன் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிறான். உணர்ச்சியால் உந்தப்படுகிறான். அகந்தை எனும் கூட்டை ஆன்மாவின் அரண்மனையாக்கி அதனுள் அரசாட்சி செய்கிறான்.

ஆர்வம் எழுந்து இறங்கிவரும் இறைவனை எதிர்கொண்டு அழைத்து இம்மையில் மறுமையின் மலர்ச்சியைக் காணும் புது யுகம் எழுவதால், சுயநலம், பழக்கம், சமூகக் கட்டுப்பாடு, மனச்சாட்சி என்னும் பொன்விலங்கு, அபிப்பிராயம் என்ற அர்த்தமற்ற உருவம், உணர்ச்சி, அகந்தையெனும் கூடு ஆகிய அனைத்தையும் சரணாகதி மூலம் நிர்மூலமாக்கி, குறுகிய மனித வாழ்விலிருந்து விடுபட்டு பரந்த பிரபஞ்ச வாழ்வான தெய்வீக வாழ்வை அவன் ஏற்பது நல்லது என்று பகவானும், அன்னையும் சுமார் ஒரு நூற்றாண்டு காலம் நமக்கு உணர்த்தினர்.

❋ ❋ ❋

*...தொடரும்*



# இம்மாதச் செய்தி

சொல் பலிக்கும், ஏற்காவிட்டால் அடுத்தவர்க்குப் பலிக்கும், பலிக்காவிட்டாலும், மீண்டும் வரும்.

**அன்னை எனக்கு நேரடியாகக் கூறியவை என் காதில் படவில்லை.**

**காதில் பட்டாலும் மனம் ஏற்கவில்லை.**

**ஆத்மா அயர்ந்த நித்திரையிலிருக்கிறது.**

எனக்கு அன்னை கொடுத்தவை என் அருகில் இருந்தவர்க்குப் பலிக்கிறது, அவரும் என் போலிருந்தால், அருள் மீண்டும் மீண்டும் வருகிறது. கண்ணிருந்தும் குருடனானேன்.

❋ ❋ ❋

### ஜீவிய மணி

நல்லது தன்னை நிலை நாட்டுவதே
செயல் என்பது வேதாந்தம்.

# லைப் டிவைன்

கர்மயோகி

## X. Conscious Force

*Page No. 83*
*Para No. 9*

**Force is thus inherent in existence.**
**It has a double potentiality.**
**It is the nature of the Force.**
**Maybe it is the alternative potentiality.**
**It alternates between rest and movement.**
**One is self-concentration in Force.**
**The other is self-diffusion in Force.**
**The how of the movement is a question.**
**The question of the movement is there.**
**Its possibility is another question.**
**Initiating impulsion must be explained.**
**Its impelling cause arises.**
**This potentiality must translate.**
**It may translate into a rhythm.**
**It is a rhythm of rest and movement.**
**They succeed each other in Time.**
**Or else it may be eternal self-concentration.**
**It is a self-concentration of Force.**
**It is the superficial play in existence.**
**It is a change of formation.**
**It is like the waves of the ocean.**



## 10. சித் - சக்தி

**சக்தி இதன்படி சத்தினில் உள்ளது.**
**இதற்கு இரு திறன்களுண்டு.**
**அது சக்தியின் இயல்பு.**
**அதற்கு வேறு வெளிப்படாத திறனிருக்கலாம்.**
**சலனம், அமைதி மாறி மாறி வரலாம்.**
**ஒன்று சக்தி செறிந்ததாக இருக்கும்.**
**அடுத்தது சக்தி பரவியதாக இருக்கும்.**
**சலனம் எப்படி ஏற்பட்டது என்பது கேள்வி.**
**சலனம் ஏன் என்பதும் கேள்வி.**
**அதன் உண்மை அடுத்த கேள்வி.**
**எப்படிச் சலனம், அதன் உந்துதல் எழுந்தது**
**என்பதை விளக்க வேண்டும்.**
**என்ன காரணம் உந்தியது எனத் தெரிய வேண்டும்.**
**இது நடைமுறைக்கு மாற வேண்டும்.**
**ஓர் அலையாக அது மாறலாம்.**
**சலனம், அமைதி மாறி வரும் அலையாக அது இருக்கலாம்.**
**அவை ஒன்று மற்றதைக் காலத்தால் தொடரும்.**
**நிரந்தரமான நிஷ்டையாகவும் இருக்கலாம்.**
**சக்தியில் செறிந்த நிஷ்டையாகவுமிருக்கலாம்.**
**சத் புருஷனின் மேலெழுந்த நிலையாக இருக்கலாம்.**
**உருவம் மாறுவதாகவுமிருக்கும்.**
**கடல் அலைகளானதாகும்.**

**This is a superficial play.**
**(This is an inadequate image.)**
**Maybe it is coeval with self-concentration.**
**Therefore it is also eternal.**
**Or it may begin and end in Time.**
**It may resume by a sort of constant rhythm.**
**Then it is not eternal in continuity.**
**It is eternal in recurrence.**

***Page No. 83***
***Para No. 10***

**How is eliminated.**
**The question why remains.**
**This is a possibility of a play.**
**It is a play of the movement.**
**It is the Force that moves.**
**The play translates itself.**
**Why is there at all this translation?**
**Why should it not remain concentrated?**
**Concentrated, it is infinite, free.**
**It is thus free from all variation.**
**Also of formation.**
**Let us assume existence to be non-conscious.**
**Consciousness is only a development.**
**It is a development of material energy.**
**We wrongly suppose material energy immaterial.**
**Then this question does not arise.**
**Then we can say the following.**
**The rhythm is the nature of the Force.**



**மேல் மட்டத்திற்குரிய அம்சம் அது.**
**(இவை தெளிவற்ற உருவகங்கள்)**
**செறிந்த நிஷ்டையுடன் சேர்ந்ததாக இருக்கலாம்.**
**அதனால் அதுவும் காலத்தைக் கடந்திருக்கும்.**
**காலத்தில் ஆரம்பித்து முடிவதாகவுமிருக்கும்.**
**நிலையான அலையாக அது மீண்டும் தொடரலாம்.**
**தொடர்ச்சியால் நிலையானதாக இல்லை.**
**மீண்டும் மீண்டும் வருவதில் நிலையாக இருக்கும்.**

**இனி எப்படி என்ற கேள்வியில்லை.**
**ஏன் என்ற கேள்வியுண்டு.**
**லீலைக்கு வழியுண்டு.**
**அது சலனத்தின் லீலை.**
**சக்தியே சலனம்.**
**அது லீலையாகிறது.**
**ஏன் இந்த மாற்றம்?**
**ஏன் சக்தியானது அப்படியேயிருக்கக் கூடாது?**
**அந்நிலையில் அது அனந்தமான சுதந்திரம் பெற்றது.**
**மாறுதலால் அது பாதிக்கப்படாது.**
**உருவம் பெறும் அவசியமும் இல்லை.**
**சத் என்பது ஜீவனற்றது எனக் கொள்வோம்.**
**ஜீவன் அதன் விளைவு என்போம்.**
**ஜட சக்தியிலிருந்து ஜீவன் எழுகிறது என்று கூறுவோம்.**
**ஜட சக்தியை நாம் தவறாக ஜடமில்லை என்கிறோம்.**
**அப்படியானால் முதலில் எழுப்பிய கேள்வி எழாது.**
**அதனால் நாம் கீழ்க்கண்டவாறு கூறலாம்.**
**அலை எழுவது சக்தியின் இயல்பு.**

**The Force is in existence.**
**Why should we look for a reason?**
**It is eternally self-existent.**
**That is its nature.**
**Therefore no question of why arises.**
**Self-existence is eternal.**
**Self-force of existence is eternal too.**
**Nature of impulsion to movement is inherent in self-force.**
**We cannot ask them why they exist.**
**Or how they came into existence.**
**We can inquire into its manner of self-manifestation.**
**We can try to know its principles of movement.**
**We can ask about its formation.**
**Its process of evolution too can be inquired into.**
**We cannot go beyond that.**
**Existence is inert.**
**Force is inert.**
**Their status is inert.**
**Their impulsion is inert.**
**Both of them are unconscious.**
**Both are unintelligent.**
**Therefore there cannot be any purpose in evolution.**
**So also, there can be no final goal in evolution.**
**Nor can there be any original cause.**
**No intention can be there too.**

❊ ❊ ❊

**contd...**



**சக்தி சத்தாக உள்ளது.**
**நாம் ஏன் காரணத்தை எழுப்ப வேண்டும்?**
**என்றும் அது தன்னிறைவு பெற்று சுயமானதன்றோ?**
**அதுவே அதன் இயல்பு.**
**அதனால் ஏன் என்ற கேள்வி எழாது.**
**சத் புருஷன் அனாதி.**
**அதன் சக்தியும் காலத்தைக் கடந்தது.**
**சலனத்திற்கான உந்துதல் சக்தியின் உள்ளுறை இயல்பு.**
**ஏன் அவை இருக்கின்றன என நாம் கேட்க முடியாது.**
**எப்படி அவை எழுந்தன எனவும் கேட்க முடியாது.**
**எப்படித் தங்களை வெளிப்படுத்துகின்றன எனக் கேட்க முடியும்.**
**சலனத்தின் சட்டம் என நாம் அறியலாம்.**
**அவற்றின் உருவகங்களை அறிய முடியும்.**
**அவற்றின் பரிணாமத்தையும் ஆராயலாம்.**
**அவற்றைக் கடந்து நாம் செல்ல முடியாது.**
**சத் ஜீவனற்றது.**
**சக்தி ஜீவனற்றது.**
**அவற்றின் நிலை உயிரற்ற நிலை.**
**அவற்றின் சலனமும் அப்படியே.**
**இரண்டும் தம்மை அறியாதவை.**
**இரண்டும் அறிவில்லாதவை.**
**எனவே பரிணாமத்திற்கு இலட்சியமிருக்க முடியாது.**
**அதேபோல் இலக்கு என்பதும் பரிணாமத்திற்கிருக்க முடியாது.**
**ஆரம்பமான ஆதியான காரணமும் இருக்க முடியாது.**
**எதை நினைத்தும் பரிணாமம் ஏற்படவில்லை என்றாகும்.**

❊ ❊ ❊

**...தொடரும்**

## ‘திவாலான’ பட முதலாளி

படம் எடுக்கும் தொழிலில் எதுவும் நிலையில்லை. படம் எடுப்பவர், விநியோகம் செய்பவர் எனப் பல நிலைகளில் பணம் படைத்தவர் வந்து கலந்து கொள்வதுண்டு.

**நேற்றிருந்த கோடீஸ்வரன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்து படஉலகு.**

செட்டியார் பட வினியோகம் செய்பவர். படம் எடுக்கவும் ஆசையுண்டு. பட உலகம் படபடப்பைத் தருவது. செட்டியாருக்கு படஉலகம் ஆட்டம் கொடுத்துவிட்டது. மனம் திவால் என்ற கருத்தை பணமாகவும், சட்டமாகவும், சமூகமாகவும் கருத ஆரம்பித்தபொழுது ஒரு பெரிய சொத்து இவரிடம் விலைக்கு வந்தது. விலை கூறுபவர்கட்கு செட்டியார் நிலைமை தெரியாது. செட்டியாரிடம் பணம் இல்லை. பெரிய சொத்து பாதி விலைக்கு வருவதை விட மனமில்லை. இதன் மூலம் தம் நிலைமை தெளியாதா என்ற நினைப்பு ஒரு பக்கம்.

தம் நிலைமையைக் காட்டிக் கொள்ளாமல் சொத்தை விலை பேசி முடித்துவிட்டார். விற்பவர்கள் நெருக்கடியிலிருக்கிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. எனவே சுத்தமாக பாதி விலையைக் கூசாமல் கேட்டார். பேரம் படிந்துவிட்டது. கிரயம் எழுத வேண்டும். ஒரு பெரிய செட்டியார் உறவினர், நண்பர். அவரைக் கலந்தார். தாமும், அவருமாகச் சொத்தை வாங்குவதாகத் திட்டம். சொத்தின் விலையில் சுமார் பாதிக்கு மேல் சொத்தின் மீதுள்ள பல்வேறு கடன்கள். அக்கடன் தொல்லையால் சொத்து விலைக்கு வருகிறது. செட்டியாருடைய திட்டம் வேறு. சொத்து பெரிய சொத்து. நிர்வாகம் சிரமமானது. விற்பவர் திறமைசாலி. எனவே செட்டியார் கிரயப் பத்திரத்தில் விற்பவர் ஓராண்டு சொத்துக்கு மேனேஜராக



இருக்க வேண்டும் என்று எழுதிக் கொடுக்கும்படிக் கேட்டார். வேறு வழியில்லாமல் விற்பவர் ஒத்துக் கொண்டார். பெரிய செட்டியாரிடம் பாதிப் பணம் வாங்கி கடன்களை அடைத்துவிட்டால், மீதிப் பாதியைப் பெறுபவர் செட்டியாருக்கு மேனேஜராகிவிட்டதால் ஓராண்டுக்குப் பிறகு கொடுக்கலாம் என்பது செட்டியார் திட்டம். கிரயம் முடிந்துவிட்டது. சொத்து கைக்கு வந்துவிட்டது. விற்றவர் அன்னை அன்பர். அவருக்குக் கடன் பாரம் கழிந்தது பெரிய நிம்மதி.

படத்தொழில் நிலைமை மாறியது. திவால் கொடுக்கலாமா, வேண்டாமா என்ற சந்தேகம் நீங்கி, அவசியம் என்ற நிலை வந்ததால், வக்கீலிடம் முடிவைச் செட்டியார் கூறிவிட்டார். படத்தொழிலில் ஏற்றம், இறக்கம் உண்டு. அங்கே வாங்கிய கடன்கள் வேறு. இந்தச் சொத்து செட்டியாரின் கணிப்பில் வேறு. “மானேஜர் பணத்தை எப்படியும் கொடுத்துவிட வேண்டும். திவால் பட்டியலில் அது வரக்கூடாது” என்பது செட்டியார் மனம். மீண்டும் நிலைமை சாதகமாக மாறியது. வக்கீலிடம் போய் மஞ்சள் கடிதாசை ஒத்திப் போடச் சொன்னார். தப்பித்தோம் என நினைத்தார். மீண்டும் மீண்டும் மஞ்சள் கடிதாசி நிர்ப்பந்தம் இருமுறை எழுந்தது. கிராமத்துப் பாஷையில் மஞ்சள் கடிதாசி என்றால் திவால் எனப் பெயர். செட்டியாருக்கு மஞ்சள் என்ற சொல்லே பயம் தரக் கூடியதாயிற்று.

தம்மிடம் பெரிய சொத்தை விற்று, மானேஜராக இருப்பவர் அவ்வளவு பெரிய தொகைக்கு பிராமிசரி நோட்டோ, ரசீதோ கேட்கவில்லை. வருஷம் ஒன்றாயிற்று, தாம் திவாலானாலும் மானேஜருக்கு முழுப் பணமும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் செட்டியார் மனதில் ஆழ வேரூன்றியது. மானேஜர் வேறு ஊரில் சொத்து வாங்குவதாகக் கேள்வி. அதற்கும் மானேஜர் செட்டியாரைப் பணம் கேட்கவில்லை. செட்டியாரே மானேஜரை அது பற்றி விசாரித்தார். மானேஜர் சொத்து வாங்கும் விபரம், ஊர், யார் மூலம் வாங்குகிறார் என்றெல்லாம் பேசுகிறாரே தவிர பணம், விலையைப் பற்றிப் பேசுவதில்லை. செட்டியாரே நேரடியாகப் போய் விபரம் தெரிந்து

கொள்ள முடிவு செய்தார். அவர் குறிப்பிட்ட நாள் தரிசன நாள். அவர் சந்திக்க வேண்டியவர் தரிசனத்திற்குப் போகிறார். எனவே செட்டியாரும் தரிசனத்திற்கு வந்து மானேஜரின் நண்பரை சந்திப்பதாக முடிவு செய்தார். தரிசனம் முடிந்தது. செட்டியாரும் அன்னையை தரிசித்தார். கூட்டம் கலைந்த பின் செட்டியாரும் மற்றவரும் சந்தித்தனர். "சொத்து கிரயப் பத்திரம் எழுதியாயிற்று. ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். இன்னும் 20 நாள் கெடுவுள்ளது" என்று செட்டியார் கேள்விப்பட்டவுடன் அதிர்ச்சியடைந்தார்.

தான் மானேஜருக்கு 1 வருஷம் கழித்துப் பணம் தரலாம் என்றிருந்தார். வாங்குவது பெரிய சொத்து. தொகை பெரியது. இது 35 ஆண்டுகட்கு முன் நடந்ததால் அன்றைய ஆயிரம் இன்றைய லட்சமாகும். செட்டியாருக்கு அவசரப்பட வேண்டிய நிர்ப்பந்தமில்லை. அவசரம் மானேஜருக்கு. அவர் பொறுமையாக இருக்கிறார்! 20 நாளில் அவ்வளவு பெரிய தொகை புரட்டுவது சாத்தியமில்லை. வக்கீலைக் கலந்தனர். சட்டப்படி கெடு 20 நாளில்லை, 50 நாள் என்று தெரிந்தது. இந்த விஷயத்திற்கு அந்த கெடு சரி வாராது.

செட்டியார் தம்மூர் திரும்பினார். தாமே மனச்சாட்சிப்படி நடக்க வேண்டும் என்பதால் இப்பெரிய கவலை. வெளிநாட்டிலிருந்த நேரம் ஒரு சிறிய பாங்கில் பெரிய client ஆக இருந்ததால் அந்த பாங்க் சேர்மனை அப்பொழுது அறிமுகப்படுத்தினார்கள். அறிமுகம் இனிய முகமாகத் தொடர்கிறது. அவரிடம் போய் நெருக்கடியைக் கூறலாம் எனில் பாங்கு பணம் தரும் எந்தத் துறையிலும் செட்டியாரில்லை. ஒரு வழியிருக்கிறது. அதைக் கேட்கலாம் என்று செட்டியார் போனார். சேர்மன், "இந்தச் சொத்துக்கு பணம் கொடுக்கக் கூடாது என ரிஸர்வ் பேங்க் ஆர்டர் இருக்கிறது" என்றார். சற்று நேரம் கழித்து சேர்மன், இவ்வளவு பெரிய தொகையை இவ்வளவு குறுகிய காலத்தில் எல்லா விஷயங்களும் சரியாக இருந்தாலும் பாங்கிலிருந்து பெற முடியாது. Procedureக்கே நேரம் போதாது. எல்லாத் தடைகளையும் மீறி உங்கள் தொகையை நான் சாங்ஷன் செய்கிறேன். ஆபீசில் உங்கள் செல்வாக்கு மூலம் இக்குறுகிய



காலத்தில் பணம் பெற முயலுங்கள் என்று கூறினார். அந்தப் பணத்தைச் செட்டியார் பெற்றது ஓர் அதிசயம். 47ஆம் நாள் கிடைத்து காரியம் தடையின்றி மானேஜருக்கு நிறைவேறியது.

மானேஜர் செட்டியாரை அன்னை தரிசனம் செய்யும்படிக் கேட்டுக் கொண்டார். மனைவியுடன் வருவதாகச் செட்டியார் ஏற்றுக் கொண்டு, 'என்ன காணிக்கைத் தருவது' என்றார். 'கணிசமாக இருந்தால் நல்லது' என்றார் மானேஜர். மானேஜருடைய ஒரு மாத சம்பளத்திற்கு ஈடான தொகையை செட்டியார் காணிக்கையாகச் செலுத்தி தரிசனம் செய்தார்.

செட்டியார் நிலை மாறியது. தொடர்ந்து மாறியது. ஒரு சொத்து எதிர்பாராத பெரிய விலைக்குப் போயிற்று. வக்கீலிடம் இப்பொழுதெல்லாம் போவதில்லை. அன்பருக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் மூலம் அன்னை செயல்பட்டு செட்டியாரைக் காப்பாற்றினார். பல லட்சம் கடனில் தவித்த செட்டியார் சில கோடி சொத்துக்கு உரியவரானார்.

**மஞ்சள் கடிதாசி மறந்து போய்விட்டது.**

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

முக்கியமான நேரங்களில் எதையும் சற்று விட்டுக் கொடுக்காமலிருந்தால், அடிப்படையான திறமைகள் எதிரான பலன் தரும்.

*நேரம் கருதி விட்டு கொடுத்தால் நல்ல பயன் தரும்.*

## காலும் கண்ணும் பார்க்கும்

கண், காது இல்லாத ஜீவராசிகள் உண்டு. பார்க்க விரும்பியதால் கண்ணும், கேட்க விரும்பியதால் காதும் ஏற்பட்டன என்று விஞ்ஞானம் கூறுகிறது.

**பார்ப்பது கண் அன்று, மனம்.**
**மனம் பார்ப்பதற்குக் கண் கருவி.**

ஜீவன் சிந்திக்க விரும்பியதால் மனம் ஏற்பட்டது.

ஒரு பிரெஞ்சு விஞ்ஞானி. அவர் ரிஷி(mystic). தன் கை, கால்களுக்கு பார்க்கும் திறமையைப் பயிற்றுவித்தார். அவற்றால் பார்க்க முடிந்தது. ஏனையோர் அவர் அனுபவத்தை ஏற்கவில்லை. பிறர் அனுபவத்தை மனம் ஏற்காது. மனம் ஏற்றாலும் அகங்காரம் ஏற்காது. மனத்தைக் கடந்தவர்களால்தான் பிறர் அனுபவத்தை ஏற்க முடியும்.

ரமண மகரிஷி, ராமகிருஷ்ண மடம் சன்னியாசி ஆகியோரைப் பற்றி யோகக் கருத்து அனுபவம் பேசப்பட்டபொழுது பகவான் கீழ்க்கண்டவற்றை விளக்கினார்.

- மகரிஷிக்கு நெஞ்சு கருவி, இறைவன் அவரை நெஞ்சால் அணுகினான்.
- பூரணயோக அனுபவத்தை ஏராளமான பேர் ஜீவனில் சித்தியாகப் பெற்றுள்ளனர். ஆனால் அதை அறிவதில்லை.
- தெரியாத ஆத்மீக அனுபவத்தைப் பேய் என்பது வழக்கம்.

சத்திய ஜீவிய சித்திக்கு இரு பகுதிகள் உண்டு. ஒன்று ஆத்மானுபவம். அடுத்தது உடலில் பெறுவது. உள்ளே ஆத்மாவில் பெறுவது பெற்றவருக்கு மட்டும் பலன் தரும். உடலில் பெற்றால் உலகத்திற்குப் பயன்படும். ஆத்மாவில் சத்திய ஜீவியத்தைப் பெற்றவர்



அநேகர் என பகவானும், அன்னையும் கூறியுள்ளனர். “இப்பகுதியில் இருந்த யோகி ஒருவர் அதைப் பெற்றிருந்தார்” என பகவான் எழுதியுள்ளார். அவர் இராமலிங்க சுவாமி. அன்னையிடம் இராமலிங்க சுவாமியின் அருட்பாவை மொழி பெயர்த்துப் படித்த பொழுது முதல் வரி படித்தவுடன் “இவருக்கு சத்திய ஜீவியம் பலித்துள்ளது” என்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் சன்னியாசி ஒருவருக்கு (descent) ஒளிப்பிரவாகம் மேலிருந்து அவருள் வந்தது. அனைவரும் அதைக் கேள்விப்பட்டு அவர் தீயசக்திகட்குப் பலியானார் என்று கூக்குரலிட்டனர். வந்த அனுபவம் மறைந்து விட்டது.

பெரிய வக்கீலுக்கும் மருந்தைப் பற்றித் தெரியாது. முதன் மந்திரிக்கு ஜோஸ்யம் தெரிய வேண்டும் என்ற அவசியமில்லை. அனுபவமில்லாதது தெரியாது என்பதை இன்று உலகம் ஏற்பதைப் போல் அன்று ஏற்கவில்லை. இருட்டில் நடக்கும்பொழுது கால் பூச்சிகள் உள்ள இடத்தில் தானே விலகும். முள்ளில் காட்டு மனிதர் நடக்கும்பொழுது கால் முள்ளிருப்பதை அறிந்து விலகுவதை அவர் அறிவர். அப்படி நேர்வது நமக்குத் தெரிவதில்லை. தெரிந்தால் “நல்ல காலம்” என்கிறோம். உள்ளங்காலுக்கும் நினைவுண்டு என்கிறார் பகவான். மகரிஷி பெரியவர். ஆனால் descent மேலிருந்து வரும் சக்தி அவர் அனுபவித்ததில்லை. அனுபவமில்லாததை இல்லை எனக் கூறுவது அன்றைய நாகரீகம். அது பேய் எனவும் வர்ணிக்கப்படுவதுண்டு.

❊ ❊ ❊

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சரணாகதி பேரருளைச் செயல்படச் செய்கிறது.

நம்பிக்கை அருளைச் செயல்பட அனுமதிக்கிறது.

உழைப்பு கர்மத்தைச் சேகரம் செய்கிறது.

## அன்பர் கடிதம்

அன்புள்ள ஸ்ரீ அரவிந்தரன்னைக்கு,

என்றும் உங்கள் குழந்தையாக இருக்க விரும்பும் பிள்ளை எழுதிக் கொள்வது. அன்னையின் அருளால், நான் இந்த வருடம் B.Sc. Chemistry முடித்துள்ளேன். நான் எப்போதும் 60 to 80 marks வாங்கும் அளவில் படிப்பேன். போன semesterஇல் ஒரு subjectஇல் 80க்கு மேல் marks வாங்குவேன் என்று எதிர்பார்த்து கொண்டிருந்தேன். ஆனால் அதில் 47 marks தான் வந்தது. மிகவும் கவலைப்பட்டேன். என் ஆசிரியர் உன் paperஐ பார்த்தேன். நன்றாகத் தான் எழுதியுள்ளாய். ஆனால் திருத்திய ஆசிரியர் எப்போதும் கண்டிப்புடன் திருத்தி marksஐ குறைத்துத்தான் போடுவார் என்று கூறி மேலும் அடுத்த semesterஇல் அதிக marks வாங்கலாம் என்றார். அடுத்த semesterஇல் அதே subjectஐ நான் சரியாகப் படிக்கவில்லை. ஆனால் study holidayஐ நன்றாக பயன்படுத்திக் கொண்டேன். Testஇன் முதல் நாளும் நன்றாகப் படித்துவிட்டேன். ஆனால் question கஷ்டமாக இருந்தது மேலும் நிறைய கேள்விக்கு answerஐ மறந்தும் விட்டேன். மறந்தாலும் நான் Mother, Mother என்று கூறிக் கொண்டே இருந்தேன். Mother எனக்கு ஞாபகப்படுத்தி எழுத வைத்தார்கள். Test எழுதி வந்தவுடன் எனக்கு பயமாக இருந்தது. போன semesterஇல் அதிக marks எதிர்பார்த்தப்போதே குறைந்த marksக்குத்தான் வந்தது. இந்தத் தடவையோ நான் சரியாக எழுதவில்லை. Fail ஆகிவிடுவேனோ என்ற பயம் என்னைத் தொற்றிக் கொண்டது. Motherஇடம் பிரார்த்தனை செய்தேன். Pass ஆவாய் என்று பதில் வந்தது. மனம் நிம்மதியடைந்தது. ஆனால் பயம் என்னும் சாத்தான் என்னைத் துரத்திக் கொண்டே இருந்தது. மனம் அமைதியாக இருக்கும்போது மனதில் சாத்தான் வந்து என்னிடம் 3rd yearஇல் போய் fail ஆனால் எல்லாருக்கும் தெரிந்துவிடும், மேலும் higher educationக்குச் செல்ல



முடியாது. ஒரு வருடம் வீண் ஆகிவிடும் என்று சொல்லிச் சொல்லி என் அமைதியை இழக்க வைக்கும். அப்போது எல்லாம் நான் Motherஇடம் கண்ணீர் விட்டு அழுவேன். வீட்டிலும் என் பெற்றோரிடமும், அக்காவிடம் சொல்லி அழுவேன். அவர்கள் நீ fail ஆகும் அளவிற்கு எழுதியிருக்கமாட்டாய், நல்ல marks வரும் என்று கூறி என் கண்ணீரைத் துடைப்பார்கள். என் அக்கா Mother குழந்தைகள் என்றும் தோல்வி அடைவது இல்லை என்று அடிக்கடி என்னிடம் கூறி என்னைச் சமாதானப்படுத்துவாள். Advice கேட்கும் போது என் மனம் மீண்டும் அமைதி பெறும். சிறிது நேரத்திற்குள்ளே மறுபடியும் அந்தச் சாத்தான் என் மனதிற்குள் வந்துவிடும்.

நான் "White Roses" bookஐ எடுத்துப் பார்த்தபோது, “அத்தகையவற்றை நீ உணரும்போது பயம் உள்ளே வருகிறது (அது தூக்கத்தில் கூட இருக்கலாம்). அப்போது நீ இங்கு மறுபடியும் இவர்கள் தங்களது கெட்ட எண்ணத்தையும், தங்களது பொய்ம்மையையும் என் மீது வீசி எறிந்து கொண்டிருக்கிறார்களே என்பதையோ அல்லது இது போன்றதையோ எண்ணுவதை விடுத்து – (கட்டாயம் இது போன்ற எண்ணங்கள் உனக்கு வந்து கொண்டிருக்க வேண்டும்) – உடனடியாக பிரபுவையோ அல்லது என்னையோ அல்லது இருவரையுமோ அழைக்க வேண்டும். ‘இதோ மறுபடியும் நான் தாக்கப்படுகிறேன். எனக்கு உதவுங்கள். என்னைக் காப்பாற்றுங்கள். இந்தத் தீய சக்திகள் என்னைத் தீண்டாமல் தடுக்கும் விதத்தில் உங்கள் அன்பும், ஆற்றலும் என்னைச் சுற்றி ஒரு கவசமாக விளங்கட்டும்’ என்று பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இந்தத் தாக்குதல் முடிவுறும்வரை வேறு எதையும் நினைக்காமல் பிரார்த்தனையை நீ விடாமல் தொடர்ந்து மீண்டும் மீண்டும் அழைக்க வேண்டும். இதுவே மிக நிச்சயமான, மிகப் பாதுகாப்பான, மிக விரைவான வழியாகும்.

மேலும் பிற சந்தர்ப்பங்களில் உன்னைத் தொந்தரவு செய்யாத விஷயங்களைப் பற்றி மட்டுமே எண்ணுவதில் வெற்றி அடைந்தால் நீ சிறிது சிறிதாகத் தாக்குதல்களைக் குறைத்து உன்னுடைய வாழ்க்கையை மேலும் சாந்தி உடையதாக ஆக்கிக் கொள்ள முடியும்.

ஏற்படும் இன்னல்களே கடுஞ்சோதனைகளும் பரீட்சைகளும் ஆகும். அவற்றை ஒருவர் சரியான மனப்பாங்கோடு சந்தித்தால், அவர் அவற்றைக் கடந்து முன்னைவிட வலுவுள்ளவராகவும், ஆன்மீகரீதியில் அதிகத் தூய்மையானவராகவும், சிறந்தவராகவும் விளங்குவார்" என்று வாசித்தேன். இதைப் படித்த பிறகு என் மன அமைதியின்மையை ஒரு சோதனை, பரீட்சை என்று எண்ணி அதை (பயம்) தோற்கடிக்க அன்னையின் உதவியுடன் போராடினேன். சிறிது மனஅமைதியை அடைந்தேன். Result வந்தது. எல்லா subjectலும் அபரிமிதமான marks எடுத்து pass பண்ணினேன். நான் எதிர்பார்த்ததைவிட பன்மடங்கு marks வாங்கினேன். மேற்படிப்புச் சேர்ந்தேன். இப்போது மிகவும் சந்தோஷமாக உள்ளேன்.

Motherஆல் என் மனதில் இருந்த பயம் என்னும் பேயை என்னால் அழிக்க முடிந்தது. இதன் மூலம் Mother மேலும் Sri Aravinder மேலும் முழு நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. இப்போது என்னையே Motherஇடம் ஒப்படைத்துவிட்டேன். Mother பிள்ளைகளுக்குத் தோல்வி என்பது கிடையாது என்பதையும், நம் மனம் அமைதி இழந்து காணப்பட்டாலும் சோர்வடையாமல் அதை அன்னையிடம் முழுப் பொறுப்போடு ஒப்படைத்துவிட்டால் Mother நமக்கு நிரந்தரமான மனஅமைதியை தருவார்கள் என்ற நம்பிக்கையையும், நம் கெட்ட எண்ணங்களை Mother அழித்துவிடுவார்கள் என்ற உண்மையையும் இந்த நிகழ்ச்சியின் மூலம் உணர்ந்துவிட்டேன்.

❈ ❈ ❈



**Agenda**

## Disgust indicates that part is untouched by transformation.

## திருவுருமாற்றம் தீண்டப்படாத இடத்தில் அருவெறுப்பு இருக்கும்.

- ★ தாயாருக்குக் குழந்தையின் மலம், நீர் அருவெறுப்பு தருவதில்லை.
- ★ டாக்டருக்கு ரத்தம், சளி போன்றவை அருவெறுப்பாக இருந்தால் சரி வாராது.

ஜவஹர்லால் நேரு ஜெயிலில் இருந்தபொழுது ஒரு நட்டுவாக்கலி (centipede) அவர் மீது விழுந்தது. எழுந்து ஓடினார். எனக்குள்ள இந்த அருவெறுப்பு ஆழ்ந்து மறைந்துள்ள பயம் அன்றோ? என்று தமக்கே கூறிக்கொண்டார்.

- ★ ஒரு கன்னத்தில் அடித்தால் அடுத்த கன்னத்தைக் காட்டு என்றார் ஏசு.
- ★ அன்னை அப்படி உன்னை அடித்தவரே உன் மீது உயர்ந்த அன்புள்ளவர் என்கிறார். அவர் மீது அன்பு எழுவதே சரி என்றும் கூறுகிறார்.
- ★ அக்பர் மார்பில் உதைத்தது அவர் பேரன் என்பதால் அந்தக் காலுக்குக் கொலுசு செய்து போட வேண்டும் என்றார் மந்திரி பீர்பால்.
- ★ எவர் நம் மார்பில் உதைத்தாலும் அதையே செய்ய வேண்டும் என்பது ஆன்மிக அன்பு.

**அருவெறுப்புக்கு இடம் இல்லை.**

★ நாகரீகம் வளரும்பொழுது ஒரு நாள் அருவெறுப்பாக இருந்தது இன்று அருவெறுப்பாக இல்லை.

★ ஆசாரமானவர்க்கு முட்டை அருவெறுப்பு. டாக்டர் சொன்னதால் ஆசாரமானவர்கள் இன்று சிலர் முட்டை சாப்பிடுகிறார்கள்.

★ பெரியவர்களைப் பேர் சொல்லிக் கூப்பிடுவது அருவெறுப்பான செயல்.

1900க்கு முன் மேல்நாட்டு பழக்கமும் அதுவே.

கணவன் பெயரை மனைவி சொல்வதில்லை என்ற பழக்கம் சில ஐரோப்பிய நாடுகளிலிருந்தது.

★ இன்று முதலாளியைப் பெயர் சொல்லி அழைக்கின்றார்கள்.

தகப்பனாரை "சார்" என்றும், "கவர்னர்" என்றும் அன்று இங்கிலாந்தில் கூறினர்.

★ இன்று பெரியவர்கள் சிறுவர்கள் தங்களைப் பெயரிட்டு அழைக்காவிட்டால் அங்கு அருவெறுப்பு அடைகிறார்கள்.

நாகரிகம் வளர்ந்ததால் அருவெறுப்பு மாறுகிறது. திருவுருமாற்றம் வந்தால் உடலுக்கு அருவெறுப்பு மாறுகிறது.

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நிச்சயம் சாதிக்க வேண்டும் என ஆழ்ந்து விரும்பியவை நடந்து முடிவதைக் காண்கிறோம்.

ஆன்மா வெளிவந்து மனத்தின் அபிலாஷையைப் பூர்த்தி செய்தால் இது நடக்கும்.

*நிலையான சாதனை ஆன்மாவின் சாதனை.*



## ஞாபகம்

தம்பி கல்லூரியில் சேர வேண்டும். தான் பட்டம் பெற்று, 5, 6 வருஷங்களாயின. கல்லூரியில் எவரையும் படிக்கும்பொழுதே நெருக்கமாகத் தெரியாது. சிபார்சில்லாமல் இடம் கிடைக்காது. எப்படியிருந்தாலும் தம்பியுடன் பல்கலைக்கழகம் போய் யாரையாவது கேட்கலாம் என்ற எண்ணத்துடன் சுந்தரராமன் தம்பியுடன் பல்கலைக்கழகம் வந்து அன்று தான் படிக்கும்பொழுது வார்டனாக இருந்தவர் செல்வாக்குள்ள பேராசிரியர் எனக் கேள்விப்பட்டு, அவரிடம் போய் தான் பழைய மாணவன் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளலாம் என்ற நினைவுடன் தயங்கித் தயங்கிப் போனான். அவரறையில் கூட்டம். கூட்டத்திற்குள் நுழைந்தான். இவனைக் கண்டு பேராசிரியர், "என்னப்பா சுந்தரராமா, தம்பி அட்மிஷனுக்கு வந்திருக்கிறாயா?" என்று கேட்டது இவனுக்கு அதிர்ச்சி. இவன் தயக்கத்தைக் கண்டவர், "நீ அந்த East Block 108ஆம் ரூமில் தானே இருந்தாய்" என்று கேட்டார். இவனுக்கே ரூம் நம்பர் நினைவில்லை. நினைவுபடுத்திப் பார்த்து சரி எனக் கண்டார். இப்பேராசிரியர் photographic memory புகைப்படம் போன்று நினைவுள்ளவர் எனக் கேள்விப்பட்டிருக்கிறான். இப்பொழுதுதான் அதை சொந்த அனுபவத்தில் காண்கிறான். Memory is the man. ஞாபக சக்தியுள்ளவன் அறிவுள்ளவன் என உலகம் கருதும்.

The Life Divinieஇல் ஞாபகம் என்ற தலைப்பில் இரு அத்தியாயங்கள் உள்ளன. அங்கு மனம் செயல்படும் வகையை விளக்குகிறார். கோபத்தை உதாரணமாகத் தருகிறார். கோபம் வரும் பொழுது நாம் நிதானித்து யோசனை செய்தால் நாம் கோபத்திலிருந்து பிரிகிறோம். பிரிவது மேலும் தொடர்ந்தால் அகந்தையும், அதன்பின் புருஷனும், முடிவாக சைத்தியப் புருஷனும் தெரிவான் என்கிறார். நாம் செய்வனவெல்லாம் நமக்கு - செய்யும் உறுப்புகட்கு - நினைவிருக்காது, நினைவுள்ள இடம் சைத்தியப் புருஷன். அவனைக் காணும் முறை மேற்சொன்னது. அதை 4 பாகங்களாகப் பிரிக்கின்றார்.

1. கோபம் என்பதை நிகழ்ச்சி எனவும்,

2. மனம் நிதானமாக சிந்திப்பதை, மனத்தின் செயல் எனவும்,

3. அகந்தை தெரிவதை அகம் எனவும்,

4. புருஷன் தெரிவதை அகத்தின் உண்மை எனவும் கூறுகிறார்.

நிஷ்டையால் புருஷனும், சமர்ப்பணத்தால் சைத்திய புருஷனும் தெரிவார்கள் என்கிறார்.

- மனித நினைவுக்கு உறைவிடம் மனம் இல்லை, சைத்தியப் புருஷன்.
- சைத்தியப் புருஷனுக்கு பூர்வ ஜென்ம ஞானம் உண்டு.

சிலருக்கு ஞாபக சக்தி அதிகம். பலருக்குக் குறைவு. ஞாபக சக்தியில்லாதவர்கட்கும் சில விஷயங்களில் ஞாபகம் உண்டு. நல்ல ஞாபகம் உள்ளவர்க்கும் முக்கியமான விஷயங்கள் மறந்து போகின்றன. இவற்றுக்குச் சட்டம் உண்டு, பல சட்டங்களும் உண்டு, உதாரணங்களும் உண்டு.

1. ஞாபக சக்தி உள்ளவர்க்கும், இல்லாதவர்க்கும் முக்கியமான விஷயங்கள் நினைவிருக்கும். முக்கியம் எனில் அவை முக்கியமான விஷயங்களில்லை. அவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக முக்கியம் எனக் கருதிவிட்டால், அது நினைவில் நிற்கும்.

   1958இல் பழைய மாணவன் 1948இல் தான் படித்த பேராசிரியரைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தான். அவருக்கு மாணவனை நினைவில்லை. கல்லூரியில் அனைவரும் அறியும்படியான மாணவன். அவருக்கு நினைவில்லை. அவன் வேலை செய்யும் இடத்தைப் பற்றி விசாரித்தார். அங்கு தமக்குத் தெரிந்த மாணவர்களிருக்கிறார்களா எனக் கேட்டார். இருக்கிறார்கள், உங்களுக்கு நினைவிருக்காது. வீரராகவன் என்ற மாணவன் என்னுடன் வேலை செய்கிறான் என்றான். எனக்குத் தெரியுமே. குடுமி வைத்திருப்பானே, நாமம் போட்டிருப்பானே என்றார். வீரராகவன் 1948இல் இவர் வகுப்பில் படித்தானே தவிர இவரிடம் ஒரு முறையும் பேசியதில்லை. எப்படி இவருக்கு நினைவிருக்கிறது என்று மாணவன் ஆச்சரியப்பட்டான். பேராசிரியர் குடுமி வைத்துள்ளவர். 1948இல் வகுப்பில் 500 பேரில் குடுமியுள்ளவர் 3 பேர்தான். நாமம் போட்டுக் கொண்டு கல்லூரிக்கு வர வெட்கப்படும் நாட்கள். குடுமியும், நாமமும் ஆசிரியருக்கு வீரராகவனை நினைவிலிருத்தியது.

2. தொழிலில் சேர்ந்த முதல் ஆண்டு நிகழ்ச்சிகள் எவருக்கும் நினைவிருக்கும். அவை சிறிய விஷயமானாலும், சேர்ந்த புதிது என்பதால் நினைவிலிருக்கும். அதற்கு நினைவு என்று பெயரில்லை. தனக்கு முக்கியம் எனப் பெயர்.

3. உடல் ஆரோக்கியம், வியாதி சம்பந்தமான விவரங்கள் நாம் மறந்தாலும், அவை நம்மை மறப்பதில்லை.

   1944இல் யானைக்கால் வியாதிக்கு மருந்தில்லை. உள்ள மருந்து இனி வியாதி பரவாமல் தடுக்கும். வீக்கத்தைக் குறைக்காது என்பது நிலை. 1950க்கு மேல் இதற்கு மருந்து வந்துவிட்டது. கல்லூரி மாணவனுக்கு கால் வீங்கியது. அவன் தன் ஊருக்குப் போய் டாக்டரிடம் காண்பித்தான். அவர், “இதற்குள்ள மருந்து பலன் தாராது. கல்கத்தாவில் ஒரு ஆயுர்வேத மருந்து இன்ஜெக்ஷனாக விற்கிறது. **Rosby** எனப் பெயர். அதை வாங்கி வா பயன்படும்” என்றார். மருந்தில் முதல் இன்ஜெக்ஷன் போட்டுக் கொண்டு மீதியைக் கல்லூரி டாக்டரிடம் போட்டுக் கொள்வதாகப் போனான். கல்லூரி டாக்டர் சிரித்தார். இருந்தாலும் கொடுத்த மருந்தைப் போட்டார். மருந்து முடிந்தபின் கால் குணமானது, டாக்டருக்கு ஆச்சரியம். மருந்தின் விலாசம் கேட்டு வாங்கிக் கொண்டார். நான்கு வருஷத்திற்குப் பின் இவனுடைய நண்பனுக்குக் கால் வீங்கியது. நண்பன் அதே விலாசத்தைக் கேட்டான். சொந்த ஊருக்கு எழுதி டாக்டரிடமிருந்து விலாசம்

பெறுவது வழி. "வருஷம் நான்காகிவிட்டது. கல்கத்தா விலாசம் நினைவில்லை. P.O.Box நம்பர் நினைவுள்ளதுபோல் தோன்றுகிறது. எழுதிப் பார்ப்போம்" என அவன் நம்பரைப் பேப்பரில் எழுதினான். அதே விலாசத்திற்கு மருந்து ஆர்டர் செய்தார்கள். மருந்து வந்துவிட்டது. **உடல் சம்பந்தப்பட்டது என்பதால் நாம் நம்பரை மறந்தாலும் (கை-உடல்) கைக்கு நம்பர் நினைவிருக்கிறது.**

4. நமக்கு முக்கியமான நாட்களில் நடந்த சிறிய விஷயங்களும் நினைவிருக்கும். திருமண நாள், பெண் பார்க்கப் போனது, முதல் நாள் வேலையில் சேர்ந்தது, பெரிய மனிதரைப் பார்க்கப் போனது போன்ற நேரங்களுடன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் நினைவிருக்கும். அது நினைவு இல்லை.

5. கல்லூரியை விட்டுப் போன 3 ஆண்டுகட்குப் பின் ஒருவர் தாம் சேர்ந்த கம்பனியில் ஒரு பரீட்சை எழுத வந்தது. அதற்கு கல்லூரி சர்ட்டிபிகேட் வாங்க வேண்டும். அரசியல் போராட்டத்தில் சுதந்திரத்திற்காகத் தியாகம் செய்தவர் என்பதால் இவர் சர்ட்டிபிகேட் வாங்கவில்லை. கம்பனியில் முதல் ஆண்டு பரீட்சை university exam எழுதிய சர்ட்டிபிகேட் கேட்கிறார்கள், இதற்கு யூனிவர்சிட்டி பரீட்சை ரிஜிஸ்டர் நெம்பர் கேட்கிறது. இவரிடம் இல்லை. தம் நண்பனுக்கு எழுதி ஒரு வேளை என் நம்பர் உங்களுக்கு நினைவிருக்கிறதா? எனக் கேட்டார். நண்பருக்குத் தம் நெம்பரும், அவர் நம்பரும் கண்முன் தோன்றின. "1601 உங்கள் நெம்பர்" எனப் பதில் எழுதினார்.

6. பல்கலைக்கழகப் பேராசிரியரை பழைய மாணவன் வீட்டில் போய்ச் சந்தித்தபொழுது அச்சமயம் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த பழைய நண்பன் மாணவனைக் காண வந்தான். "நான் 4 ஆண்டுகளாக I classஇல் பாஸ் செய்தது உங்களுக்குத் தெரியும், இந்த ஆண்டு டைபாயிட் வந்ததால் பரீட்சை சரியாக எழுத முடியவில்லை. அநேகமாய் பாஸாகாது. இந்தப் பேராசிரியரை எனக்குப் பாஸ் போடச் சொல்" என்று கேட்டான். "நான் அது போன்ற காரியத்தில் தலையிட மாட்டேன்" எனப் பதில் சொல்லிவிட்டு உள்ளே போனவுடன் பேராசிரியர் விஷயமறிந்து வெளியே வந்து போன மாணவனைக் கூப்பிட்டு உன் நெம்பர் என்ன எனக் கேட்டு சுவரில் 1428 என எழுதினார். "இம்மாணவன் முதல் மாணவன். இவன் பெயிலாகக் கூடாது" என்று அவனுக்குப் பாஸ் போட்டார். 1950இல் நடந்தது. 1990இல் நம்பர் பேசும்பொழுது நினைவிருக்கிறது எனில் சம்பந்தப்பட்ட விஷயம் முக்கியம்.

7. தமிழ் எழுத்தாளர் ஒருவர் காமராஜ் முதன் மந்திரியாக இருக்கும்பொழுது பார்க்கப் போனார். எழுத்தாளர் கடலூர் என அறிந்தவுடன், காமராஜர் "கடலூரில் புருஷோத்தமன் என்று ஒருவர் என்னுடன் 1942இல் ஜெயிலிலிருந்தார். உங்களுக்குத் தெரியுமா?" என்றார். அவர் எழுத்தாளருடைய மாமன். 1942இல் ஜெயிலில் கண்டவர் 1963இல் நினைவில் காமராஜருக்கிருந்தது.

காமராஜ் உள்ளூர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிவிட்டுச் சாப்பிட காங்கிரஸ் தலைவர் வீட்டிற்கு வந்தார். அதே வீட்டுக்கு அவர் 15 வருஷம் முன் வந்துள்ளார். தலைவரை நோக்கி, "உன் மகன் சுபாஷைக் கூப்பிடு" என்றார். 15 வயதுப் பையன் வந்து எதிரில் நின்றான், "ஏண்டா நீதானே என் இலையிலிருந்த முட்டையை தவழ்ந்து வந்து எடுத்தது" என்று கேட்டார்.

8. பழைய நண்பர்கள் ரோட்டில் சந்தித்தனர். 1939இல் ஒன்றாகப் பள்ளியில் படித்தது, 1956இல் ரோட்டில் சந்திக்கின்றார்கள். ஒருவர் கிராமத்துப் பள்ளியில் படித்துவிட்டு ஆங்கிலமே தெரியாமல் நகரத்துப் பள்ளியில் சேர்ந்தவர். நகரத்துப் பள்ளியில் மாணவர்கள் ஆங்கிலத்தில் தெளிவாக இருப்பதால் இவருக்கு இங்கு பாஸ் செய்ய முடியுமா என பதைபதைப்பு. கால் ஆண்டுப் பரீட்சையில் 64 மார்க் வாங்கியது பெரிய அதிர்ஷ்டம். அதே பரீட்சையில் இன்று ரோட்டில் சந்தித்தவர் 82 மார்க்கு வாங்கியது அவருக்கு நினைவு வந்தது. தம் நிலை பிறரை நினைவு கூறுகிறது.

9. 1968இல் மதர் சர்வீஸ் சொஸைட்டி பதிவு செய்யப்பட்டது. அதன் Articles and Memorandum Registrarக்குப் போகும் முன் அன்னையின் ஆசீர்வாதத்திற்குப் போக வேண்டும். அது ஆகஸ்ட் மாதம். அன்னைக்கு உடல் நலம் சரியில்லை. எவரையும் பார்க்காத நேரம். அதனால் ரிஜிஸ்ட்ரேஷனை ஒத்திப் போட்டுக் கொண்டிருக்கும் பொழுது சம்பக்லால் "என்னிடம் பேப்பரைக் கொடுங்கள். நான் முடிந்தால் blessings வாங்கித் தருகிறேன். Blessings என அன்னை எழுதுவார். நேரம் சரியில்லாததால் எழுத அதிக இடம் கொடுத்து டைப் செய்யுங்கள்" என்றார். அரைப் பக்கம் இடம் வைத்து டைப் செய்து அனுப்பினோம். அன்னை பெரிய எழுத்தில் blessings என எழுதினார். 1975இல் ஆஸ்ரமம் டிரஸ்டி அதைப் பார்த்தார். இது அன்னைக்கு உடல் நலமில்லாத நேரமாயிற்றே. நானே பார்க்காத நேரமாயிற்றே, எப்படி blessings பெற்றீர்கள் என்றார். வருஷத்தில் அன்னை 8, 10 முறை யாரையும் பார்ப்பதில்லை. ஒரு வாரம், ஒரு மாதம், சில நாள் என இடைவெளியுண்டு. டிரஸ்டிக்கு அன்னை விஷயம் என்பதால் தேதி முதற் கொண்டு நினைவிருந்தது.

10. Pride and Prejudice கதையில் பிங்லி எலிசபெத்தை லாம்டனில் சந்தித்துப் பேசும்பொழுது "நாம் கடைசியாக நவம்பர் 26இல் 8 மாதம் முன் டான்ஸ் ஆடினோம்" என்றான். ஜேனுடன் டான்ஸ் ஆடிய நாள் பிங்லிக்கு 8 மாதமில்லை, 8 வருஷமானாலும் மறக்காது.

11. கடின உழைப்புள்ள நேரம் உடலின் தெம்பு அழிந்தபின் சூட்சும உடல் விழித்துக் கொள்ளும். அப்பொழுது சூட்சும நினைவு எழும். பரீட்சைக்குப் படிப்பவர்கட்கு இந்த அனுபவம் உண்டு.

- ஒருவருக்குப் பரீட்சை ஹாலில் புத்தகம் எதிரில் வந்து பக்கங்கள் புரண்டு எழுத வேண்டிய பதில் தெரிந்தது.
- மற்றொருவருக்கு நாளை வரப்போகும் 10 கேள்விகளும் - **IAS** பரீட்சையில் - கண்முன் தோன்றின.



12. அன்னைக்குத் தேவையானவை அனைவருக்கும் பளிச்சென நினைவு வரும். 1973 நவம்பர் 18ஆந்தேதி காலையில் அன்னையின் உடலை தியான மண்டபத்தில் கட்டிலில் வைக்க வேண்டும். அடியில் போட கம்பளம் வேண்டும். மாடியிலிருந்து கீழே வந்த டிரஸ்டிக்கு திடீரென பல ஆண்டுகட்கு முன் வந்த கம்பளம் நினைவு வந்தது. அப்பொழுது வைத்த இடம் நினைவுக்கு வந்தது. உடனே போய் எடுத்து வந்தார். கட்டிலுக்கடியில் போட்டனர்.

**அக்கம்பளம் ஓர் அங்குலம் குறையாமலும், மிகையாகாமலும் அவ்விடத்தில் பரவியது.**

- நினைவுள்ளவருக்கும் மனக் கசப்பிருந்தால் சம்பந்தப் பட்டவர்கள், சம்பந்தப்பட்ட விஷயங்கள் நினைவு வாராது.

  ஒருவர் மனைவியுடன் சண்டை போட்டுக் கொண்டார். ஆபீசுக்குப் போனார். அவருடன் 4 வருஷமாக வேலை செய்யும் நண்பர் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். அவரைப் பார்த்துப் பேச நினைத்தார். அவர் பெயர் நினைவுக்கு வரவில்லை. வெகுநேரம் முயன்றார். பலனில்லை. 10 நிமிஷமான பின் ரங்கநாதன் என நினைவு வந்தது. அவர் மனைவி பெயரில் ஆரம்பித்த பெயர் என்பதால் மனைவியுடன் போட்ட கசப்பான சண்டை நண்பர் பெயரை மறக்கச் செய்தது.

- பெண்களுக்கு நெடுநாள் முன் விருந்தாளி வந்தபொழுது செய்த சமையல் நினைவிருக்கும்.
- ஹோட்டல் சர்வர்கள் சிலருக்குப் பல நாள் முன் நாம் சாப்பிட்ட பண்டம் நினைவிருப்பதுண்டு. கொடுத்த பில்லும் நினைவு வரும்.
- டாக்டர்களுக்கு பேஷண்ட் மறந்துவிடும், அவருக்கு வந்த வியாதி நினைவிருக்கும்.

- வக்கீலுக்கு கட்சிக்காரன் நினைவிருக்காது, கேஸ் நினைவு வரும்.
- இலாக்கா டைரக்டரானவரை அவருடன் ஒரே அறையிலிருந்தவர், இருவரும் சேர்ந்து போட்டோ எடுத்துக் கொண்டனர், பார்க்கப் போனார். கல்லூரி நண்பர் என மட்டும் நினைவு வந்தது. P.C. அலெக்ஸாண்டர் கவர்னரானபின், அவர் வேலை செய்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பார்க்கப் போனபொழுது அலெக்ஸாண்டரிருந்த நாட்களில் இருந்த முக்கியமானவர் எவரையும் அவருக்கு நினைவில்லை எனக் கண்டார். அந்த நாளில் பிரபல பேச்சாளராக இருந்த ஜூனியர் ஆசிரியரை மட்டும் நினைவு வைத்திருந்தார் அலெக்ஸாண்டர்.
- பெரிய மனிதர்களும் அவர்கள் சிறிய வாழ்வில் மூழ்கிவிடுவார்கள். அப்படிப்பட்டவர்கட்கு அச்சிறிய வாழ்வுக்குப் புறம்பானவர் எவரையும், எந்த விஷயத்தையும் நினைவில் வைத்திருக்க முடியாது.
- பெரிய மனிதன் கூறிய சிறிய விஷயமும் பெரியவர் கூறியதால் நினைவிருக்கும்.
- சிறிய மனிதன் கூறிய பெரிய விஷயம் நினைவிருக்கும்; சொல்லியவர் நினைவிருக்காது.

ஞாபக சக்தியில்லை என்பவர்கள் ஓரளவு அதைப் பெறலாம். முயன்றால் பெரிய அளவு பெறலாம். திறமான ஞாபகசக்தி வேண்டுமென்றாலும் பெறலாம்.

1. கண்ணாடி எடுத்துவர மறந்துவிட்டேன், ஆபீஸ் சாவியை வீட்டிலே வைத்துவிட்டேன், ஊருக்குப் போனபின் டெலிபோன் நம்பரை எடுத்துப் போக மறந்துவிட்டேன் என்பவர்கள் செய்யக் கூடியது ஒன்றுண்டு. அது check list.



எந்த வேலையானாலும், அதை ஆரம்பிக்கும் முன் செய்ய வேண்டியதை நினைவுபடுத்தி, பலரையும் கேட்டு ஒரு list தயார் செய்து, அந்த list இல்லாமல் வேலை செய்வதில்லை என்று முடிவு செய்தால், இது போன்ற எந்தத் தவறும் வாராது. இது நடைமுறைக்குரிய முறை a physical method.

2. பொதுவாக மறதியிருக்கிறது என்றால், அவருக்கும் சில விஷயங்கள் நினைவில் இருப்பதைக் காணலாம். அதனால் நினைவிருக்க வேண்டிய விஷயத்தை, நினைவுள்ள விஷயத்துடன் இணைத்துவிட்டால் மறக்காது. அதற்கு ஒரு முயற்சி வேண்டும். நிலத்துப் பட்டா நம்பர் பல சமயம் தேவைப்படுகிறது. மறந்துவிடுகிறது எனில் அந்த நம்பரை எதனுடன் இணைத்துப் பார்க்கலாம் என்று கண்டால், புரியும். உதாரணமாக 144, 26, 100, 365, 3366 என்ற நம்பர்கள் தடை உத்தரவு, ஆங்கில எழுத்தின் எண்ணிக்கை, முழு நம்பர், வருஷத்தின் நாட்கள், இரண்டு மூன்றும், இரண்டு ஆறும் அதன் இரட்டிப்பு என பல நம்பர்களை மற்றதுடன் இணைத்து நினைவுபடுத்த முடியும். ஒருவர் அட்ரெஸ் எல்லாம் நினைவிருக்கிறது, நம்பர் மட்டும் மறந்து போகிறது. எப்பொழுதோ கடிதம் எழுதுகிறோம் நினைவில்லை என்றால் அவர் வீட்டு நம்பர் நமக்குரிய நம்பர்களுடன் எதனோடாவது தொடர்பு உள்ளதா எனக் காண முடியும். நம் வீட்டு நம்பர் 14 ஆனால் அவர் வீட்டு நம்பர் 145 ஆனால் 14 மறக்காது, மூன்றாம் நம்பர் 1+4 என்று பார்த்தால் நினைவில் இருத்த முடியும். போன் நெம்பர்கள் 6 அல்லது 9 இலக்கம் இப்படிச் செய்ய முடியாது. நாம் மறக்க முடியாத போன் நம்பர்களுடன் ஒரு தொடர்பு கண்டு நினைவிலிருத்தலாம். பலருக்கு நம்பர் மறக்கும். மறக்க முடியாத நம்பர்களுடன், விஷயங்களுடன் இணைந்து வரும் நெம்பர்களை அப்படி நினைவுபடுத்தலாம்.

2. நாட்கள், கிழமைகள், தேதிகளை அதுபோல் நினைவில் பெரிய அளவுக்கு இருத்த முடியும்.

- நாம் Aug. 15 தரிசனத்திற்கு முதலில் வந்தால் அது சுதந்திர தினம் என்பதால் நினைவில் இருத்தலாம்.

- அதிகப் பழக்கமில்லாத பெரிய ஆபீசர் பிறந்த நாள் Oct. 3ஆம் தேதி. இது மறந்துவிடுவதால் சில பிரச்சினைகள் வருகின்றன என்றால், அதை, காந்தி பிறந்த மறுநாள் என்று கண்டு கொண்டால் மறக்காது.
- ஒரே ஆபீசில் வேலை செய்தாலும் ஒருவர் பெயர் மறந்துவிடுவது அவரைப் பார்க்கும்தொறும் சங்கடமாகிறது என்றால் அவர் பெயர் சீனிவாசன் என்பதை நம் உறவில் உள்ள ஒரு சீனுவாசனுடன் இணைத்து இவருக்கு என் பெரியப்பாவின் கடைசி மகன் பெயர் என நினைவு வைத்துக் கொண்டால் மறக்காது.
- Encyclopaediaவில் spelling aeவா அல்லது eaவா என்று அடிக்கடி சந்தேகம் வந்தால் அது alphabetical orderலிருக்கிறது என்றால் நினைவிருக்கும்.
- முக்கியமாக நினைவிருக்க வேண்டிய பலவற்றை மற்ற முக்கியமான விஷயங்களுடன் தொடர்பு செய்தால் நினைவுக்குப் பலனிருக்கும்.

3. சிரசாசனத்திற்கும் ஞாபகத்திற்கும் நேரடியான தொடர்பில்லை என்றாலும், சிரசாசனம் செய்ய முனைந்தால் ஞாபகம் வளரும்.

100க்கு 100 ஞாபகம் வேண்டுமென்று பிரியப்பட்டால் மறதி எழும்தோறும் ஒருமுறை தவறாமல் அன்னையை நினைத்தால், ஞாபக சக்தி வளர வேண்டும் என்று கேட்காமலேயே tenacious memory வலுவான ஞாபக சக்தி வந்துவிடும்.

❊ ❊ ❊





## Being, Becoming, Being of the Becoming

“எங்கள் சித்தியை வீட்டில் சிறியவர், பெரியவர் அனைவருக்கும் பிடிக்கும். திருமணம் போன்ற நேரங்களில் சித்தியைச் சுற்றி ஒரு கூட்டமேயிருக்கும். நாங்கள் கேலியாகக் கூறும் சொல் ஒன்றுண்டு. சித்தியை ஒரு கட்சியாகவும், மற்றவரை ஒரு கட்சியாகவும் வீட்டைப் பிரித்தால், அனைவரும் அவர் கட்சியில் இருப்பார்கள் என்போம்”.

**ஆன்ம விழிப்புள்ள அன்புடையவர் சித்தி.**

அய்யர் கையால் காப்பி சாப்பிட்ட பின் வேறு காப்பி பிடிக்கவில்லை என்று பேர் வாங்கியவர் அய்யர். சிதம்பரம் கோவிலுக்கு அன்னை வந்துபொழுது காரிலிருந்து இறங்கியவரை அய்யர் பார்த்ததாகக் கூறினார்.

சக்தி - ஆசை - அன்பு - அனைவரின் அன்புடன் கலப்பது என்ற நான்கு நிலை வாழ்வுக்குண்டு. சைத்தியப் புருஷன் விழிப்பாக இருந்தால் பிறர் இனிக்கச் செயல்படும். அய்யர் ஒருவரைக் கண்டு காப்பிப் போட நினைத்தால் காப்பி சாப்பிடுபவருடைய இனிமை அய்யர் மனத்தைத் தொடுகிறது. போடும் காப்பி இனிக்கிறது. இனிக்கிறது எனில் ஆத்மாவில் இனிக்கிறது. வேறு காப்பி பிடிக்கவில்லை.

**சைத்தியப் புருஷன் விழிப்பாக இருப்பதால் அன்பு வெளிப்படும் செய்கை போட்டுக் கொடுக்கும் காப்பியில் தெரிகிறது.**

Life Divineஇல் 360 முதல் 364 வரை காலம், காலத்தைக் கடந்த நிலை, கடந்ததையும் கடந்த நிலை விளக்கப்படுகிறது. ஆறு வகையாக மீண்டும் மீண்டும் இக்கருத்தை பகவான் கூறுகிறார். இதைப் படித்த அன்பர் எதுவுமே புரியவில்லை என்றார். விளக்கங்களைக் கேட்டபின் முதற்பகுதி ஓர் அளவுக்கு விளங்குகிறது என்றார்.

**புரிந்தாலும், புரியாவிட்டாலும், ஆத்மானுபவம் தரவல்லது Life Divine என அறிவார்.**

இக்கருத்தை மனதில் ஏற்று தியானம் செய்தார். ஆறு மணி நேரம் சிட்டிகை போட்டதுபோல் போய்விட்டது. உடல் தியானத்தில் "கரைந்தது". மறுநாள் மீண்டும் அப்பகுதியைப் படித்தபொழுது மேலும் சற்று புரிவது போலிருந்தது. முக்கியமான கருத்து.

1. Becoming என்பது பிரகிருதி, வாழ்வு என்கிறோம் - இல்லறம் என நாம் அறிந்தது. இது காலத்திற்குரியது.
2. Being என்பது புருஷன், தவத்திற்குரியது - துறவறம் எனப்படும், இது காலத்தைக் கடந்தது.
3. Being of the Becoming என்பது சத்தியவாழ்வு - இல்லறத்தில் துறவறம், இது காலத்தைக் கடந்ததையும் கடந்த ஆண்டவன் வாழ்வில் வெளிப்படுவது. சித்தியும், அய்யரும் இதற்குரியவர்கள்.

| | |
|---|---|
| Being | - துறவறம் - புருஷன்- காலத்தைக் கடந்த நிலை. |
| Becoming | - இல்லறம் - பிரகிருதி, இயற்கை - காலம். |
| Being of the Becoming | - துறவறத்தின் தூய்மையுள்ள இல்லறம் - அன்னை வாழ்வு - கடந்ததைக் கடந்தது (அய்யர், சித்தி). |

❊ ❊ ❊

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மனம் புரிந்து கொள்ளும் திறனை அழித்து இழப்பதற்கு, மனத்தின் மௌனம் எனப் பெயர்.





## எது நியாயம்

(Dec. 2001, இதழின் தொடர்ச்சி)

*இல. சுந்தரி*

உலக முழுமையையும் சத்தியத்தால் ஆட்கொள்ளப்போகும் அந்தத் தெய்வம், அவனால் சத்யம் என்றழைக்கப்படும் அந்தத் தெய்வம் புன்னகை பூத்தது. வறுமையும், ஏழ்மையும் ஓடிவிட்டன. குசேலர் கொண்டுவந்த அவலை ஒரு பிடி கண்ணன் உண்ட பிறகே குசேலர் குறை தீர்ந்தது. ஏதும் கொண்டு வாராமலேயே குமரன் செல்வக் குமரன் ஆனான். செல்வமென்றால் ஆன்மீகச் செல்வம்.

"நீ எப்போதும் இங்கு வரலாம். நீ சேவை எனச் செய்யும் எதனையும் நான் ஏற்கிறேன்" என்றார். சாதகரை அழைத்து குமரன் எப்போது வந்தாலும் இங்கு உணவளித்து அவனைக் கவனிக்க வேண்டும் என்றார். உடைமைகளையெல்லாம் விட்டுக் கொடுத்து இங்கேயே இருக்கும் நம்மை விட இவன் எவ்விதத்தில் உயர்ந்தவன் என்று கூடச் சிலர் கருதினர். அதன் பிறகு குமரன் சிந்தித்துச் செயல்படவில்லை. ஏதோவோர் அரிய சக்தியால் ஆட்கொள்ளப் பட்டான். அன்னையின் பெருமையை அவன் ஆழ்மனம் உணர்ந்து எப்போதோ விழித்துவிட்டது. தான் செய்யும் எச்செயலையும் அன்னைக்கு அர்ப்பணமாகவே செய்தான்.

சிறிய அளவில் சோப்பு செய்யும் செயலைச் சொந்தமாகத் தன் குடும்பத்தினர் உதவியுடன் தொடங்கினான். பக்தியும், விசுவாசமும் சோப்பாக உருவெடுத்ததால் இதை வாங்க ஒரு பெரிய கூட்டமே உருவானது. தன் தேவைக்குச் செலவு செய்தது போக அன்னைக்குக் காணிக்கையாக மீதமுள்ளதைக் கொடுத்துவிடுவான்.

இந்நிலையில் இதன் பெருமையறிந்து பெரிய அளவில் வெளிநாட்டு 'ஆர்டர்' கிடைத்தது.

அன்னையிடம் வந்த வாய்ப்புப் பற்றிக் கூறினான். "எந்த அளவில் தொழில் விரிந்தாலும், பேராசையும், சோம்பலும் தவிர்த்துச் செயல்படு" என்றார் அன்னை.

அதையே மந்திரமொழியாகக் கொண்டு ஒரு தனி இடம் வாங்கி வேலைக்கு நல்ல அன்னை பக்தர்களை நியமித்து அவர்களுக்குரிய கூலியை நியாயமான முறையில் நிறைவு செய்தான். அப்போதும் அப்பொருளில் பற்றுக் கொள்ளாது குடும்பத்தின் தேவை போக மீதமுள்ள பணத்தை அன்னையின் பணிகளுக்கே செலவிட்டான். இவனைச் சிலர் வாழத் தெரியாதவன் என்றனர்.

தொழில் பெருமளவு வளர்ந்து குடும்பமும் செழிப்படைந்தது. அன்னை அளித்தவை என்ற பணிவுடனேயே அவற்றைப் பயன்படுத்தினான். திருவுள்ளப்படி நடக்கட்டும், என் விருப்பம் தேவையில்லை என்ற பிரார்த்தனை மனதில் எழுந்தது.

"கண்ணம்மா! நான் என்னை முழுமையாக அன்னைக்கு அர்ப்பணிக்க ஆசைப்படுகிறேன். உன்னைத் தாயாக்கி இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையானேன். பிள்ளைகளுக்குப் பெருமை தரும் பெற்றோராய் இருக்க வேண்டுமெனக் கூறுவாய். இப்போதும் உன்னுதவியை நாடுகிறேன். அவர்களை அன்னை அன்பர்களாகவே காண வேண்டும். என் வீடு, என் குழந்தை என்ற சிறு சிறு வட்டங்களைத் தாண்ட வேண்டிய நிலையில் உள்ளேன். இதற்கும் உன் உதவியை நாடுகிறேன். இந்த மண்ணில் மனைவி என்பவள் மரியாதைக்குரியவள், வணக்கத்திற்குரியவள். மரத்திற்கு நீரைப் பெற்றுத் தந்து அதை உயிர் வாழவும், வளரவும் செய்யும் வேர் பூமிக்கடியில் பிறர் கண்ணுக்குப் புலப்படாமலிருக்கிறது. வேர் தனது வேலையை விளம்பரப்படுத்துவதில்லை. இத்தகைய பணிகளையே பெண்கள் புரிந்துள்ளனர் என்று படித்திருக்கிறேன். உன்னால் உணர்ந்தும் இருக்கிறேன் என்றான். இனிதான் நீ பெரிதும்



பொறுமை கொள்ள வேண்டியதிருக்கும். உன் கணவன் தன் சுயநலத்திற்காக உன்னை விட்டுவிட்டான் என்று உலகம் கூறும். அவன் பொருட்டு வாழ்ந்த உன்னைப் புறக்கணித்துத் தன் போக்கில் போகிறான் என்று பேசும்" என்றான்.

"என் உலகம் அதுவன்று. நீங்களே என் உலகம். நீங்கள் சொல்வதும், செய்வதுமே நான் ரசிக்கும் வாழ்வு. நீங்கள் மேல்நோக்கிப் போகும் போதெல்லாம் நான் படியாகவே இருப்பேன்" என்றாள்.

நன்றியால் நெகிழ்ந்து அவள் கைகளைக் கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

இந்நிகழ்ச்சிகளுக்குப் பிறகு நாமும் அவரை ஏகவசனத்தை விட்டு அவர் என்றே குறிப்பிடுவோம். குமரன் என்ற இளைஞனின் சாதாரண வாழ்வைக் குறித்தவரை குமரன் எனவும், அவன் எனவும் குறிப்பிட்டோம். இனி மகானாக வளரத் தொடங்கிய பின் அவர் என்பதே பொருத்தமுடையதன்றோ?

முதலில் அவர் தம் அனுபவம் குறித்து நூல் எழுதினார். அன்னையின் கோட்பாடுகள் எவை என்பதைக் கண்டும், தாமே மேற்கொண்டும் அதன் பலன்களை மற்றவர் பெறுமாறு செய்தார். ஓயாது தம்முள்ளத்தில், உணர்வில், உடலசைவுகளில் அன்னையை ஏற்றார். தெய்வீகத்தால் சூழப்பட்டார். இதன் பயன் இவரைச் சூழ்ந்துள்ளவர்கள் இவரைத் தம்மிலும் மேம்பட்டவராகக் கருதினர். அவர் கூறாமலேயே அவர் எண்ணங்களைப் பிரதிபலித்தனர். அவருடைய விருப்பத்திற்கே தாம் நடக்க வேண்டும் என எண்ணினர். சொல்வது நல்லது என அவர் கூறியவற்றை ஏற்றனர். அவரிடம் கருத்துக் கேட்டால் சரியாக இருக்குமென அவரைப் பலரும் நாடினர். அவர் விருப்பு வெறுப்பு இன்றி அன்னையின் கொள்கைப்படியே நடந்து கொள்வதால் நடுவு நிலைமை இயல்பாகிவிட்டது. சுற்றமும்,

பகையும் என்ற இருவேறு நிலைகளைக் கடந்தார். அன்னையே எல்லாவற்றின் சாரமும் என்றானதால் அன்னையைத் தேடிப் போகும் நிலையும் நின்றது. அன்னையென்ற அற்புத சக்தியை உடலில், உணர்வில், ஜீவனில் ஏற்றதால் 'தான்' அற்று 'அது'வாகும் நிலை வந்துவிட்டது.

இவர் வீடு என்பது அன்பர்களின் பொது இடமாயிற்று. சிறு குடும்பத் தலைவியாயிருந்த கண்ணம்மா அன்பர் கூட்டம் என்ற பெருங்குடும்பத் தலைவியானாள். இவருடைய எல்லா முன்னேற்றங்களுக்கும் உறுதுணையாய் நின்று அன்னையின்பத்தை அகிலமுழுவதும் பரப்ப, தன் இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாது இரவு, பகல் பாராது சாதாரணப் பெண்ணாய் நின்ற கண்ணம்மா என்னும் பெண்ணரசி, அன்னை அன்பர்களின் நன்றிக்குரிய பெண்ணரசி என்பதைக் கூறவும் வேண்டுமோ.

❊ ❊ ❊

- *முற்றும்*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நம்மை நல்லவர் என அடுத்தவர்க்கு
நிரூபிக்க நாம் முயலுகிறோம். அடுத்தவர்
மனத்தால் சிந்திப்பவர் என நினைப்பதால்
அதைச் செய்கிறோம். அது சரியன்று.
பிரச்சினைகள் உணர்வாலானவை.
மனத்தால் அவற்றைத் தீர்க்க முடியாது.

***உணர்வாலான பிரச்சினையை***
***அறிவால் தீர்க்க முடியாது.***





## P. 34. There only were Silence and the Absolute

## மௌனமும், பிரம்மமும் மிகுந்தன

ஒரு பரந்த மைதானத்தில் நாம் அமைதியைக் காண்கிறோம். பெருங்கூட்டம் அமைதியாக இருப்பதுண்டு. தியானத்தில் அமைதியுண்டு. சோகத்திலும் அமைதியுண்டு. உலகில் வாழ்வுக்குரிய அம்சங்கள் கணக்கில்லை. எந்த அம்சத்திற்கும் அதற்குரிய அமைதி (silence) உண்டு.

**சப்தமில்லாத அமைதியை நிசப்தம் என்போம்.**

**எண்ணமற்ற அமைதியை மௌனம் எனக் கூறுவர்.**

**சிந்தனையில் திறனை இழந்த மனத்தின் அமைதி பேரமைதி.**

**பிரம்மம் குணங்களற்றதால் அமைதி என்ற குணத்தையும் பிரம்மத்திற்குக் கற்பிக்க முடியாது.**

**முடிவான அமைதி பிரம்மத்திற்குரியது.**

**அதை ஸ்ரீ அரவிந்தர்,**

**Silence behind Silence என்கிறார்.**

**மௌனத்தைக் கடந்த மௌனம்.**

இதுபோன்ற சொற்றொடர்கள் The Life Divineஇல் ஏராளமாக வருகின்றன. அவை மந்திர சக்தி வாய்ந்தன. மந்திரமாகப் பயன்படக் கூடியது மேற்சொன்னது. ஆங்கிலத்தில் சொன்னாலும், தமிழில் சொன்னாலும் சக்தி குறையாது. பகவான் எழுதியது என்பதால் ஆங்கிலத்திற்கு சக்தியுண்டு. தாய்மொழி உணர்வைத் தொடும் என்பதால் தமிழுக்கு சக்தியுண்டு. மொழிபெயர்ப்பால் தன் சக்தியை

அழியா இலக்கியம், அமர காவியம் இழக்காது. அது மட்டுமன்று. இதை நினைத்தாலே அதன் மந்திர சக்தி செயல்படும்.

- *அவன் வாழ்வின் அஸ்திவாரம் காலத்தைக் கடந்தது.*
- *அசையாத அகண்டம் அசைவுடன் கலந்தது.*
- *ஊமை ரூபம் உலகத்தை அடக்கியது.*
- *அசைவற்ற அமைதியில் புதுமையாக மனம் பிறந்தது.*
- *திருஷ்டியின் எண்ணம்.*
- *கருத்து கனியும் குரல்.*
- *ஜடத்தின் ஈர்ப்பு, நம் உடலை இழுக்கிறது.*
- *ரூபமற்ற சக்தி, ஆதியின் ஜோதி.*
- *கடந்ததின் இனிமை, காலத்தின் கரு.*
- *ஒளிமிகுந்த படபடப்பு ஒடுங்கி வரும் நேரம்.*
- *பொன் போன்ற நாளின் மெதுவான தோல்வி.*

❊ ❊ ❊





## தத்ரூபமாகக் காண்பது

வெகுநாளைக்கு முன் 3-D சினிமா வந்தது. அதன் வகைகள் பல. படத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை நாம் காண்பதுடன் அனுபவிப்பதுமாகும். வாசனை, அசைவு ஆகியவற்றை படித்துப் பார்ப்பவரும் அனுபவிக்கும் நிலை அது. ருசியான சமையல் படத்தில் வந்தால் படத்தைப் பார்ப்பவர்கட்கு வாசனை வரும். ரயிலில் ஒருவர் படத்தில் போனால், நாமும் ரயிலில் போகும் உணர்வு ஏற்படும். அது தொடர்பில்லை.

Super marketஇல் பொருள்களை வாங்குபவருக்கு இது போன்ற அனுபவம் தரும் (sales technique) வியாபார முறை இப்பொழுது சிறிதளவு வந்துள்ளது. இதை ஒரு T.V விற்கும் கடையில் ஏற்பாடு செய்தால், T.Vயில் நடக்கும் நிகழ்ச்சிகளில் நாம் நேரே பங்கு கொள்வதாக இருக்கும். இருவர் சண்டை போட்டால், நாமும் சண்டையில் கலந்து கொள்வது போலிருக்கும்.

அமெரிக்க super marketகளில் தனி அறை ஏற்பாடு செய்து இதுபோன்ற பல தரப்பட்ட அனுபவங்களை வாடிக்கைக்காரர்கள் பெறும் புது வழி வந்துள்ளது.

வியாபாரத்தில் Life Response என்பது என்ன? அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதை, சோதனை செய்யும் அன்பர் $1000க்கு வாங்கும் வாடிக்கைக்காரரை எப்படி $10,000க்கு வாங்கச் செய்யலாம் என்பதைக் கண்டார். அவர்கள் நாட்டில் புதுப்புது முறைகள் வந்தபடியிருக்கின்றன. எதை ஏற்பது என்று தெரிவது சிரமம்.

அவர் ஒரு முடிவு எடுத்தார். "சுயநலமில்லாமல் என் வியாபாரம் பெருக Life Response முறையை நான் சரிவரப் பயன்படுத்த ஆனவற்றைச் செய்கிறேன்" என்பது அந்த முடிவு. அன்று கம்பனிக்குப் போனபொழுது மானேஜர் மேற்சொன்ன முறையைப்

பற்றிக் கூறவே, இதையே நல்ல சகுனம் எனக் கொள்கிறேன் என்று அதைப் பற்றிய விவரங்களை சேகரித்துத் தரும்படி மானேஜரிடம் கூறினார். மானேஜர் விவரங்களுடன் வந்து முதலாளியிடம் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, இந்தப் புதிய முறையை விற்பவர்கள் வந்துள்ளனர் என்ற செய்தி Life Response ஆக வந்தது. வந்தவர்கள் demonstration தங்கள் சரக்கைக் காண்பித்தனர். இக்கடையில் சரக்கு $1000 முதல் $50,000 வரையுண்டு. ஒன்றிரண்டு $ 500,000 முமாகும். புதிய சரக்கின் விலை $ 75,000 வரையுள்ளது. இம்முறையைக் கடை ஏற்க வேண்டும் என்று முதலாளி முடிவு செய்தார்.

- வந்தவர்கள் இச்சரக்குக்கு National distribution rights வினியோக உரிமையைக் கொடுக்க விரும்பினர்.
- முதலாளி அதையும் ஏற்றார்.

❊ ❊ ❊



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

அண்ணன் - பொது வாழ்விலுள்ள அன்பர்கள் சாதாரண அன்பர்களைவிட அதிக அருளைப் பெறுவர். ஏனெனில் அவர்கள் வேலை சேவையாகிறது. பிறருக்கு அவர் செய்யும் சேவைக்கு அருள் வந்தபடியிருக்கும் என்பது முதல் விஷயம். பிரார்த்தனை பலிக்கிறது, தவறாது பலிக்கிறது என்பதற்கு மேல் செய்யும் வேலையின் விவரம் தெரிந்தால் அருள் அதிகமாகப் பலிக்கும் என்பதைக் காண்கிறோம். அன்பர்கள் எங்கிருந்தாலும் மற்றவர்களைவிடச் சிறப்பாக வேலை செய்வார்கள். அதனால் செய்யும் வேலையின் விவரத்தை நன்கு அறிவார்கள். தெளிவுள்ள இடத்தில் அருள் எளிதாகச் செயல்படுவதால் பலன் அதிகமாக இருக்கிறது. Grace acts better through greater clarity.

தம்பி - பணத்தை அன்பர்கள் அதிகமாகச் சம்பாதிக்கலாம் என்ற கருத்தை நாட்டு நடைமுறையில் சொல்லமுடியுமா?

அண்ணன் - ஒரு கம்பனியில் திறமையாக வேலை செய்பவர் வெளியே போய் சொந்தமாகக் கம்பனி ஆரம்பிப்பது வழக்கம். அதுபோன்று செயல்படும் அன்பர்களை நான் கவனித்ததில் சொல்லக் கூடியது அன்பர் முயற்சியால் கம்பனி எவ்வளவு சம்பாதித்ததோ அதை அன்பரால் சம்பாதிக்க முடியும். எல்லாத் தொழில்களிலும் இது பொருந்தாது.

தம்பி - நான் ஒரு சிறிய கம்பனியில் மேனேஜராக இருக்கிறேன். 5 வருஷத்தில் கம்பனி 8 கோடி சம்பாதித்தது. என் முயற்சியால் இதில் 3 கோடி வந்திருக்கும் என்றால்

நான் இன்றைய 25,000ரூ சம்பளத்தை விட்டு தொழில் நடத்தினால் அந்த 3 கோடியைச் சம்பாதிக்கலாம் என்று வைத்துக் கொள்ளலாமா?

அண்ணன் - முறையாகச் செய்தால் அந்த 3 கோடி குறைந்தபட்சம். ஆர்வம் அதிகமானால் அதற்கேற்ப பல மடங்கு உயரும் (multiples of it). தவறாது அன்பர்கள் விஷயத்தில் இதைக் காணலாம்.

தம்பி - 450ரூபாய் சம்பளம் பெற்ற மானேஜர் கம்பனிக்கு 1 கோடிக்கு மேல் சம்பாதித்துக் கொடுத்தார். வெளியே வந்த முதல் வருஷமே அந்த 1 கோடியைச் சம்பாதித்து விட்டாரே. எந்த ஆபீசானாலும், அங்கு அன்பர்கள் இருந்தால் பொதுவாக அன்பரே முதன்மையாக இருப்பது நான் பார்த்த விஷயம்.

அண்ணன் - அன்பர் எனில் சிறப்புண்டு, சிறப்பு முத்திரையுண்டு. நீ சொல்வது அதுபோன்ற ஓர் அம்சம். எல்லாத் தொழில்களிலும் பணத்தைப் பொருத்திப் பார்ப்பது கடினம். வியாபாரத்தில் எளிமையாகத் தெரியும். ஒன்று சொல்லலாம்.

**“அன்பருடைய குறிப்பிட்ட திறமையால் ஸ்தாபனம் பெற்ற பலன் குறைந்தபட்சம் அன்பருக்குண்டு”.**

அதுவரைக்கும் அறுதியிட்டுக் கூறலாம். வாழ்வுக்கும் இந்தச் சட்டம் பொது என்றாலும் நாம் கேள்விப்படுவது அதன்று. இந்த முதலாளிக்கு 50 லட்சம் சம்பாதித்துக் கொடுத்தேன். நான் பெற்றனவெல்லாம் இந்த 1500 ரூபாய் சம்பளத்தை 1800 ஆக்கினார். அவரை விட்டு வேறிடம் போனேன். அந்த முதலாளிக்கு கோடிக் கணக்காய் சம்பாதித்தேன். வாயாரப் பாராட்டினார். அத்தோடு சரி. நான் வேறெதையும் காணவில்லை



என்று நாம் கேள்விப்படுவது அன்பர்கள் வாழ்வில் இல்லவேயில்லை.

தம்பி - நாட்டில் பணப்புழக்கம் அதிகப்படுத்த முடியும் என்பது போல் நம் தொழிலில், குடும்பத்தில் பணவரவை 5 மடங்கு, 10 மடங்கு அதிகப்படுத்த முடியாதா?

அண்ணன் - நம் நாடு நெடுநாளாகச் சில விஷயங்களைப் பாராட்டி வருகிறது. ஒரு குடும்பம் நசித்துவிட்டால் அவர்கள் வீட்டு வேலைக்கு போக வேண்டும். அதைத் தவிர்க்க நாம் கண்டு பிடித்த முறை இட்லி சுட்டு விற்பது. இந்தத் தொழில் நசித்துப் போன குடும்பங்களின் மரியாதையை வெகுவாகக் காப்பாற்றியுள்ளது. அதுபோல் பணவிஷயத்தில் நாம் கண்டது சீட்டு கட்டுவது. இது இன்று பெருவாரியாகப் பெருகிவிட்டது. குடும்பச் செலவுக்கு மிகவும் உதவும் முறை இது. ஆனால் பலர் சேர்ந்தால்தான் சீட்டு கட்ட முடியும். அதுபோல் புது முறைகளைக் கண்டுபிடித்தால் ஒரே குடும்பமோ, ஒரே கம்பனியோ பின்பற்றிப் பயன் பெற முடியாது. பலர் சேர்ந்தால் பயன்பட முடியும். கம்பனி மானேஜ்மெண்ட் முறைகளால் பணவரவை 5 அல்லது 10 மடங்கு உயர்த்த முடியும். எந்தக் குடும்பமும் “வருமானம்” என்ற கட்டுரையால் அதுபோல் பலன் பெறமுடியும். புதியதாக ஒன்று ஏற்படுத்த முடியும் என்றாலும் அது தேவையில்லை. Complementary currency என்ற முறையுண்டு. “மாற்றுப் பண நடமாட்டம்” என்று கூறலாம். அது 10 அல்லது 20% பணத்தை வளர்க்கப் பயன்படும். உலகில் 2400 இடங்களில் அது புழக்கத்தில் இருக்கிறது. அதுபோன்ற புதிய முறைகளில் 5 or 6 ஒரு காலனி, நகர் ஏற்றுக் கொண்டால் பணம் இருமடங்காகும். சுத்தம் 100% உயர்ந்தாலே இருமடங்காகும்.

தம்பி - ஏற்கனவே சுத்தம் போன்ற 12 தலைப்புகளில் உள்ள விஷயங்களைப் பின்பற்றி வருமானத்தை குறைந்த பட்சம் 2 அல்லது 3 மடங்கு உயர்த்தியவர்கள் இதையும் பின்பற்றினால் மேலும் 2, 3 மடங்கு உயருமல்லவா?

அண்ணன் - அவர்கள் ஒரு 100அல்லது 200 குடும்பம் ஓரிடத்திலிருந்தால் இதைப் பின்பற்ற முடியும். கம்பனியைவிட, குடும்பத்தில் 10 மடங்கு பணம் பெருக நாம் முன் சொன்ன முறைகளே போதும். ஒரு வீடு என்றால் கணவன், மனைவி, இரு பிள்ளைகள், சில சமயங்களில் பெரியவர்கள் ஓரிருவர் என 5 முதல் 7 வரை இருப்பார்கள். நாம் கூறிய முறைகளை வீட்டில் ஒருவர் அல்லது இருவர் பின்பற்றினால் வருமானம் 2 மடங்காகும். இரகஸ்யம், பெரியவர்களும், குழந்தைகளும் இதே முறையை வழுவாமல் பின்பற்றினால் 10 மடங்கு பணம் பெருகும். அனைவரும் ஒரு முறையைப் பின்பற்றினால் பலன் அபரிமிதமாக இருக்கும். இதற்கு சம்மதப்பட முன்வரும் குடும்பங்கள் இருக்காது. நுட்பமான இடமே அதுதான். முறையன்று. குழந்தைகளைப் பயிற்றுவிக்க முன்வர மாட்டார்கள். பெரியவர்களிடம் போனால் சண்டைதான் வரும். அதனால் அதைத் தவிர்க்க வேண்டும்.

தம்பி - 'யோக வாழ்க்கை' என்ற நூலில் 979 நம்பரிட்ட இந்தச் செய்தி நாட்டுக்குரியது. அதை ஓர் அன்பர் 'அது என்ன இரகஸ்யம்' என ஆசிரியரை எழுதிக் கேட்டிருந்தார். அந்த விபரங்களை நவம்பர் 14ஆந் தேதி நேரு நினைவு சொற்பொழிவில் பேச்சாளர் பேசியிருந்தார். நாட்டில் கங்கா-காவேரித் திட்டம்



அமுலுக்கு வந்தால் உணவு உற்பத்தி பெருகும், ஏராளமான வேலை உற்பத்தியாகும், மின்சாரத் தட்டுப்பாடு இருக்காது. இதற்கு 60,000 கோடி ரூபாய் வேண்டும். இந்த 60,000 கோடியை நாமே உள்நாட்டில் உற்பத்தி செய்யலாம். ஏன் பணமில்லை என்று கூற வேண்டும். ஏன் கடன் வாங்க வேண்டும் என ஒரு கருத்து பேசப்பட்டது.

அண்ணன் - தவணை முறையில் நாம் ஏற்கனவே இதைப் பின்பற்றுகிறோம். கங்கையும் காவேரியும் இணைந்தால் ஏராளமான நிலம் புதியதாகப் பயிராகும். இன்று தரிசாக 5000ரூபாய்க்கு விலை போகும் நிலம் அன்று 50,000 அல்லது 1 லட்சம் விலை போகும். நமக்குத் தேவையான அத்தனை பணமும், இத்திட்டம் நிறைவேறிய பின் அந்நிலங்களின் மதிப்பாக எழும்.

தம்பி - இன்று எப்படி அப்பணம் பயன்படும்?

அண்ணன் - எல்லா நாடுகளும் அறிந்த முறை அது. எதிர்காலத்தில் வரப்போகும் நிலத்தின் அதிக மதிப்பை இன்று பணமாகப் பெறும் முறையைச் சர்க்கார் அறியும். சர்க்கார் முன்வந்தால் நடக்கும்.

தம்பி - அதேபோல் குடும்பங்களின் எதிர்கால வருமானத்தை இப்பொழுது பயன்படுத்தும் முறையுண்டா?

அண்ணன் - உண்டு. அது நடைபெற ஓர் ஊர் அல்லது ஒரு நகர் (சுமார் 1000 குடும்பங்கள்) அல்லது ஒரு பெரிய கம்பனி அம்முறையை ஏற்றால் ஒரு குடும்பத்தில் இருவர் வருமானம் இன்று 10,000ரூபாய் ஆனால் வரும் 10 வருஷத்தில் அதில் பாதி வருமானம் 6 இலட்சமாகும். அப்பணம் இன்று அவர்கட்கு, செலவுக்குக் கிடைக்க வழி செய்யும் அம்முறை.

தம்பி - ஒரு நகர் என்றால் குடும்பங்கள் வரும் போகும். கம்பனியானால் வேலை செய்பவர்கள் கம்பனியை விட்டுப் போவார்கள். அவையெல்லாம் சரி செய்ய முடியாது.

அண்ணன் - எதற்கும் வழியுண்டு. சுலபமன்று. வருமானத்தை இரு மடங்காக மாற்ற மனத்திட்பம் போதும். இருமடங்காக்கிய குடும்பம் 10 மடங்காக்க முயன்றால் நடக்கும். 10,000ரூபாய் சம்பாதிக்கும் குடும்பத்தில் 6 லட்சம் ரொக்கம் வருவது பெரியது. அது வந்தால் அதன் மூலம் சம்பாதிக்கவும் வழியுண்டு.

தம்பி - எல்லாவற்றிற்கும் கட்டுப்பாடு அவசியம்.

அண்ணன் - கட்டுப்பாடிருந்தால், தானே பணம் பெருகும். பெருக்கினால் அதிகம் பெருகும். ஓரளவு தானே மேல்நாடுகளில் இது போன்ற பல முறைகள் வருகின்றன. இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் அவை இங்கும் வந்துவிடும்.

தம்பி - பணம் தட்டுபாடில்லை என்றால் நாடு சுபிக்ஷமாகிவிடும். இதே முறைகளைத் தவறாகவும் பயன்படுத்தலாம்.

அண்ணன் - எதையும் தவறாகப் பயன்படுத்தலாம். அதனால்தான் கட்டுப்பாடு வேண்டும் என்றேன். பத்தோ, இருபதோ வருஷம் கழித்து அனைவருக்கும் வரும் முறைகளை அன்பர்கள் இன்று அருளால் பெறமுடியும் என்பதையே நான் பல வகைகளில் திருப்பித் திருப்பித் தருகிறேன்.

தம்பி - நாடு சுபிக்ஷமடைவது அவசியம். அதில்லாமல் பஞ்சம், பட்டினியுள்ளவரை ஆன்மீகம், அன்னை காதில் விழாது.



அண்ணன் - சுபீக்ஷமடைவதற்கே ஆன்மீகத்தைப் பின்பற்றலாம் என்பது என் கொள்கை.

தம்பி - அன்னையிடம் வந்த பிறகு பணம் சம்பாதிக்க வேண்டும் என்று பேசுவது அழகாக இல்லை என்று பலரும் நினைக்கிறார்கள்.

அண்ணன் - பரம்பரையாகப் பணம் என்றால் தவறு என்று நாம் வளர்ந்துள்ளோம். அந்த நாளில் டாக்டர், வக்கீல், ஆசிரியர், தட்டான், தச்சன், என எவரும் பணம் கேட்கமாட்டார்கள். கொடுத்ததை வாங்கிக் கொள்வார்கள்.

தம்பி - அது போலிருந்தால் பணமே வாராதே.

அண்ணன் - ஆனால் சிலர் முதலில் பணம் வாங்கிக் கொண்டு தான் வேலை செய்வார்கள். தொழிலில் அதிகப் பணம் கேட்பவருக்குத்தான் நல்ல பேர் உண்டு. பணம் கேட்க கூச்சப்படுபவருக்குப் பணமும் வாராது. பேரும் இருக்காது.

தம்பி - அது உண்மை.

அண்ணன் - மனிதன் பணத்திற்கு மட்டும்தான் அசைவான். பணம் மட்டும் வேண்டாம் எனப் பேசுவான்.

தம்பி - இப்பொழுது எல்லாம் மாறிவிட்டன. பணம் முக்கியமாகிவிட்டது.

அண்ணன் - இரண்டும் வருகிறது. பணம் என்பது அருள். அருளாக நினைத்துப் பணத்தைப் பாராட்டினால், பணமும், அருளும் வரும். மனதால் பணத்தை நாடி, வாயால் வேண்டாம் என்றால் பணமும் வாராது. அருளும் வாராது. மனத்தின் உண்மையைப் பாராட்டுவது சரி. காணிக்கை எனில் அளவில்லை என்று யாருக்குத்

தெரியாது. 5000ரூபாய் பணம் வேண்டுமென 10ரூபாய் காணிக்கை அனுப்பினால் கிடைக்கிறது. 5 இலட்சம் வேண்டுமானால் அதே 10ரூபாய் காணிக்கை அனுப்பினால் பலிக்கிறது. அனுபவத்தில் காணிக்கைக்கு அளவில்லை. மனமே முக்கியம். காணிக்கை அவசியம் என அறியாதவரில்லை. ஆனால் மனம் பெரிய காணிக்கையைக் கொடுக்க ஏன் விரும்புகிறது? நமக்குப் பணம் முக்கியம் என்பதால், அப்படி நினைக்கிறது. அந்த உண்மைக்கு அன்னையிடம் பலன் உண்டு.

தம்பி - காவேரி நீருக்காக தமிழ்நாடும், கர்னாடகாவும் தகராறு செய்கிறார்கள்.

அண்ணன் - காவேரிப் பிரச்சினையில் உனக்கே சொந்த அனுபவம் உண்டு. அன்னை சட்டம் அதனுள் இருக்கிறது.

தம்பி - பல வருஷங்கட்கு முன் பம்பாயிலிருந்து ஓர் அன்பர், ஏன் காவேரி தண்ணீருக்காகத் தகராறு? காவேரி ஜீவநதியில்லையா? அவளே அன்னையில்லையா? பிரார்த்தனை செய்தால், பொங்கி வரமாட்டாளா? என நினைத்துப் பிரார்த்தித்தார். அந்த ஆண்டு காவேரியில் வெள்ளம். தகராறுக்கு வேலையில்லை. காவேரி விஷயத்தில் இரண்டு, மூன்று பேர் இதைச் செய்து பார்த்திருக்கிறார்கள். சட்டம் என்ன?

அண்ணன் - விஷயம், காவேரியானாலும், காஷ்மீரானாலும் நேரடியாக ஒருவர் உணர்ச்சியைத் தொடுமானால் அவர் பிரார்த்தனை அந்த நேரம் பலிக்கும். தவறாமல் பலிக்கும். நிரந்தரத் தீர்வுக்கு நியாயமான ஏற்பாடு வேண்டும்.



தம்பி - ஏன் நாட்டுப் பிரச்சினைகளை இதுபோல் தீர்க்கக் கூடாது?

அண்ணன் - பிரச்சினைக்கு உரியவர் அன்னையை நம்பினால் அது முடியும். வெளியிலிருப்பவர் செய்வது அந்த ஒரு நேரம் பலிக்கும்.

தம்பி - பிரச்சினைக்குரியவர் என்றால்?

அண்ணன் - பிரச்சினையால் பாதிக்கப்படுபவர் அல்லது அதைத் தீர்க்கும் பொறுப்புடையவர். சம்பந்தமில்லாதவர் பிரார்த்தனை எடுபடாது. அன்பர்கள் அனைவரும் பார்த்தவை பல உண்டு. அதை மீறிய விஷயங்களும் உண்டு. பதிலோ, விளக்கமோ சுலபம், ஏற்பவர் குறைவு.

அனைவருடைய அனுபவம்,

- அன்னையை அறிந்ததிலிருந்து பிரச்சினைகள் குறைந்து மறைந்தன.
- சச்சரவு, கவலை நீங்கி சந்தோஷமும், நிம்மதியும் வந்தன.
- பலிக்காத பிரார்த்தனை என்பதில்லை.
- வாழ்வில் அன்பர் நிலை - அந்தஸ்து - உயர்ந்தபடி இருக்கிறது.

அதை மீறியவை,

- சில பிரச்சினைகள் தீர்வதில்லை.
- இதுவரையில்லாத பெரிய தொந்தரவுகள் வருகின்றன.
- முதலில் இருந்ததைப் போலில்லை. ஓரளவுக்குப் போய் அப்படியே நின்றுவிடுகின்றன.

விளக்கம் :

- நம் குறையை வலியுறுத்துவதால் பிரச்சினை தீருவதில்லை.
- அன்னைக்கு நெருக்கமானவர் என நம்பிக்கை இல்லாதவர், துரோகம் செய்தவரைப் பாராட்டினால் ஆபத்து வருகிறது. அவரை விட முடியவில்லை.
- முதலிலிருந்த ஆர்வமும், பக்தியும் இப்பொழுதில்லை.

தம்பி - தெரியாதவர்க்குச் சொல்லலாம். வம்பை விலை கொடுத்து வாங்கிச் சட்டம் பேசுபவர்களை விலக்க வேண்டியது அவசியம். அவர்களுக்கு விளக்கம் சொன்னால், நமக்குத் தொந்தரவு வரும்.

அண்ணன் - இன்று நம் நாட்டில் வசதி அதிகமாக இருக்கிறது.

தம்பி - புள்ளி விவரம் சொல்லவில்லை.

அண்ணன் - அது விவரமில்லாத புள்ளி. அதனால் சொல்ல முடியாது. அதை World Bank மாற்றியது உனக்குத் தெரியாதா? 384 டாலரிலிருந்து $ 1200க்கு இந்தியா வந்துவிட்டது.

தம்பி - இதுமட்டும் சரி என எப்படி ஏற்பது?

அண்ணன் - நம் நாடு வசதியாகிறது என்பதை உன்னால் ஏற்க முடியுமா?

தம்பி - கடைத் தெருவைப் பார்த்தாலே தெரியுதே. மாமா சொல்வார் அவர் நாளில் சர்க்கார் ஆபீசர் வீட்டில், வக்கீல் வீட்டில் ஒரு மேஜைதான் இருக்கும். சிலர் வீட்டில் அதுவுமிருக்காது. இப்போது குமாஸ்தா வீட்டில் சோபா இருக்கிறது.



அண்ணன் - Standard of living வாழ்க்கைத் தரம் உயர்ந்ததை மறுக்க முடியாது. இந்தியப் பொருளாதாரப் பேராசிரியர் ஒருவரிடம் இது எப்படி நடந்தது என்று கேட்டபொழுது அவரிடம் பதிலில்லை.

தம்பி - இந்த விஷயம் உலகில் எந்த economist பொருளாதார நிபுணரும் சொல்லவில்லையே! பலர் பல காரணங்களைச் சொல்கிறார்கள். ஒருவர் கூறுவதை அடுத்தவர் மறுக்கிறார்.

அண்ணன் - அன்று (1950இல்) ஒரு வேளை சாப்பாடு கிடைத்தால் போதும் என்ற நினைவு. இன்று முதல் காரியமாக சினிமா பார்க்கணும், ஹோட்டலுக்குப் போக வேண்டும், T.V. இல்லாமல் முடியாது என்பது மனநிலை. அதனால் கூலி ஏறுகிறது. தரம் உயர்கிறது.

தம்பி - எங்கிருந்து அந்த உபரிப் பணம் வந்தது?

அண்ணன் - இல்லாமல் முடியாது என்றால் அதிகமாக உழைக்கத் தயாராகிறான். பணம் வருகிறது.

தம்பி - இது கீதை வாசகமாயிற்றே "நீ எதாக மாற நினைக்கிறாயோ, அதாக மாறலாம்" என்று கூறுகிறதே, அதுவா.

அண்ணன் - கீதைப் பிரசங்கம் செய்பவர்களும் இதை விட்டு விடுவார்கள். அன்று வெறுஞ்சொல். இன்று நடைமுறை. நான் உலகத்தைப் பற்றிப் பேசவில்லை. அன்பர்களைப் பற்றிச் சொல்கிறேன். பொதுவாக அன்பர்கள் வாழ்வில் பாராமுகமாக இருக்கிறார்கள். அன்னையின் சக்தியை அறிவதில்லை. 2 மடங்கு வேண்டும் என்ற ஆர்வமிருக்கும், அதற்கான முயற்சியிருந்தால் கிடைக்கும் எனத் தெரியாது என்பதே உண்மை.

தம்பி – பணம் வேணும் என்று முயன்றால் வருமா?

அண்ணன் – அப்படிச் செய்தாலும், முயற்சிக்குப் பலன் உண்டு. ஏன் சரியாகச் செய்யக் கூடாது? என் குடும்பம் உயர்வடைய வேண்டும். குழந்தைகள் பெரிய படிப்பு படிக்க வேண்டும். வசதி இருக்க வேண்டும். அதற்காக உபரி வருமானம் வேண்டும். அது அருள். அதைப் பெற நான் எந்த முயற்சியையும் எடுக்க வேண்டும் என்பது சரியான மனநிலை.

தம்பி – அன்பராக இருப்பதால் என் நிலை 10 மடங்கு உயர்வதால், அருள் பலரையும் போய்ச் சேரும் என்பது நல்லதல்லவா?

அண்ணன் – நல்ல மனப்பான்மையுடன் செய்தால் அது உயர்ந்தது தான். உலகம் முன்னுக்கு வந்தது முயற்சியால்தான். அதை நாம் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். ஓர் அன்பர் பெறுவது உலகம் பெறுவதாகும். உடல் நலம், படிப்பு, பண்பு, குணம், நிம்மதி, உயர்வு எல்லாவற்றிற்கும் அடிப்படை பணம். அதைப் பெற முயல்வது சரி, அவசியம். பணத்தாசையில்லை இது. மனம் பணத்தை ஆசையாக நாடுவது சரியில்லை. அவசியமாக நாடுவது சரி, ரொம்பவும் சரி. அருளாக நாடுவது புனிதச் செயல், யோகம், சொல்லப் போனால் அதுவே யோக வாழ்க்கை.

தம்பி – இது தவறு என்று சொல்கிறார்களே!

அண்ணன் – உனக்கு இது தவறா!

இல்லை என்றால், போய் அதைச் செய். தவறு என்பவர் பல வகைப்பட்டவர்கள். நாம் அவ்வகையை சேரக் கூடாது.



1. விவரம் தெரியாத நல்ல மனிதர்.

2. மரபை மூட நம்பிக்கையாகப் பின்பற்றுபவர்.

3. சம்பாதிக்கத் திறமையில்லாதவர்.

4. மனம் நிறைய ஆசையும், வாய் நிறைய பொய்யும் சொல்பவர். இவர்கள் பட்டியலில் நாம் சேரக்கூடாது. பணம் இறைவனுக்குரியது என்று அன்னை கூறிய பின் ஏன் பேச வேண்டும்?

அன்பர்களைப் பொருத்தவரை இரண்டு முக்கிய விஷயம்.

1. உலகம் மாறிவிட்டது. முயற்சி பலிக்கும்.

2. எதையும் பூர்த்தி செய்ய அன்னை காத்திருக்கிறார். இவை இரண்டையும் புறக்கணிப்பவர் வாய்ப்பை இழப்பவர். அவரிடம் வாதாட வேண்டாம்.

தம்பி – இவ்வளவையும் கேட்டுக் கொண்டு என் பக்கத்து வீட்டுக்காரர், பணத்தை மனத்தால் உற்பத்தி செய்ய முடியும் என்பது என்ன என்றார்.

அண்ணன் – மந்திரத்தில் பெருந்தொகை எதிர்ப்பார்ப்பார்.

தம்பி – தம் அபிப்பிராயத்தை வேறு வகையாகச் சொல்கிறார்.

அண்ணன் – ஏன் அவரிடம் நீ இதைப் பற்றிப் பேசுகிறாய்? அப்படியெல்லாம் வாராது என்று சொல்வதுதானே?

தம்பி – நான் வேறொருவரிடம் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு இதைக் கேட்டார்.

அண்ணன் – “அவருக்கு வரும். உங்களுக்கு வாராது” என்று சொல்லேன்.

தம்பி – முகத்தை முறித்துச் சொல்லாமல், நல்ல பதில் சொல்ல விரும்புகிறேன்.

அண்ணன் - அவரைக் கடையில் போய் உட்காரச் சொல்லு. தம் கடைக்கே போவதில்லை அவர்.

தம்பி - அப்படியெல்லாம் கடுமைப்படுத்தாமல், நல்ல பதில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அண்ணன் - இது தவறான ஆசை என விட்டு விடு. அவர் கேட்கமாட்டார்.

தம்பி - அவர் மாற வழியில்லையா?

அண்ணன் - அவர் சோம்பேறி, விதண்டாவாதக்காரர். வீட்டிலிருந்து அவரை விரட்டினால் புத்தி வரும். மரியாதையாக நடத்தினால் சட்டம் பேசுவார்.

தம்பி - அவருக்குரிய இதமான வழியில்லையா?

அண்ணன் - அவரை நினைக்குந்தொறும் உன் நினைவு தவறு எனப் புரிந்தால் பலன் வரும்.

தம்பி - அப்படி ஒரு வாரம் செய்தேன்.தொடர்ந்து கடைக்குப் போனார்.

அண்ணன் - அந்த வாரம் இந்த இடக்குப் பேச்சுப் பேசினாரா?

தம்பி - இல்லை. தத்துவம் என்ன சொல்கிறது?

*தொடரும்...*

❊ ❊ ❊

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross Extension, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## பந்து போன்ற பவுன் நிற ஒளி

இளம் பெண் பலருடன் மையம் வந்து மகிழ்ந்து தன்னை மறந்ததையும் மறந்ததால், உடன் வந்தவர்கள், இரவு நேரத்தில் தன்னைத் தனியே விட்டு விட்டுப் போனதை கவனிக்கவில்லை.

மாடியிலிருந்து இறங்கி வந்தால், வீடு எப்படிப் போய்ச் சேர்வது? இதுவரை இந்த நேரத்தில் தனியே போனதில்லையே என்று எண்ணம் எழுந்தபொழுது பயம் வரவில்லை. மையத்தில் மனம் தன்னை இழந்தது, அது உள்ள இடத்தில் மையத்தின் சூழல் வந்து அமர்ந்துள்ளதை அறிய முடியவில்லை. உடன் வந்த நண்பர்கள் உதறிவிட்டுப் போனால், நான் அதுபோல் உன்னை விட்டுப் போக மாட்டேன் என்று அன்னை கூறுவது போன்ற உணர்ச்சி தெம்பைக் கொடுத்தது. கண்முன் பொன்னிற ஒளி தோன்றியது.

- **அது பந்துபோல் உருண்டையாக இருந்தது.**
- **அவர் நகரும்பொழுது ஒளியும் நகர்ந்தது.**
- **வீடு போகும்வரை பாதுகாப்பாக உடன் வந்தது.**
- **மனம் அவரிடமிருந்தால் நம்மை அறியாமலும் பாதுகாப்பு நமக்குண்டு.**

* * *

## ஒரு மூட்டை புழுங்கலரிசி

கணவனிடம் மனைவி எவ்வளவு நாள் இந்த ரேஷன் அரிசியை சாப்பிடுவது, ஒரு மூட்டையாகப் புழுங்கலரிசி வாங்கிப் போடக் கூடாதா? என்று சாப்பிடும்பொழுது மனம் கசந்து கூறினாள். போஸ்டாபீஸ் தனக்குத் தரும் சம்பளமும், மனைவியின் வருமானமும் சேர்ந்து அவ்வசதியைத் தாராது என்றுணர்ந்த கணவன், உன் தாய் வீட்டிலிருந்து வந்தால்தான் அது நடக்கும் என்று கூறியபொழுது, தனக்குத் தாயாக வரித்த அன்னையிடம் நிலைமையை மானசீகமாகக் கூறினாள். கூறிய பக்தருக்கு அன்னையின் ஆற்றலைப் பற்றி இது போன்ற விஷயங்களில் தெரியும். அன்னையிடம் கூறிய நேரம் மனம் புழுங்கலரிசி, கணவனின் கருத்து, தாய் வீடு ஆகியவற்றிலிருந்து அன்னையிடம் நகர்ந்து வந்ததை பக்தர் அறியவில்லை. மனம் இதமாக இருந்தது. அது அன்னையின் ஸ்பர்சம். கொஞ்சநாள் கழித்து ஆபீசிலிருந்து மனைவி வீட்டிற்கு வந்தபொழுது கணவன், “இன்று காலை பக்கத்து வீட்டாருக்கு வழக்கம் போல் வரும் புழுங்கலரிசி தேவையில்லை என்பதால் அரிசி வியாபாரி என்னிடம் தாம் கொண்டு வந்த புழுங்கலரிசி மூட்டையை எடுத்துக் கொள்ளச் சொன்னார். பணமில்லை என்பதால் ஏற்க முடியவில்லை. பிறகு தரலாம் என வற்புறுத்தித் தந்தார்” என்ற சேதியைக் கூறினார்.

- **அன்றிலிருந்து ரேஷன் அரிசி போய் அதே வியாபாரி புழுங்கலரிசியை மூட்டையாகத் தருகிறார்.**
- **நியாயமான தேவைகள், தேடி வரும் வாய்ப்புகளை மனம் மலர்ந்து ஏற்றால் சட்டம் புழுங்கலரிசிக்கும், புவியை ஆள்வதற்கும் ஒன்றேயாகும்.**

***மனம் மலர மனம் பிரச்சினையிலிருந்து விலகி அன்னையை அன்பினால் அகமகிழ்ந்து ஏற்க வேண்டும்.***